உ
சிவமயம்



# திருமதி சோமநாதர் இலட்சுமியம்மா

(அடிகக்கை)

இறைபதம் எய்தியமை குறித்த

## நினைவஞ்சலி மலர்

16.11.2005

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# திருமதி சோமநாதர் இலட்சுமியம்மா



மலர்வு
1926 - 12 - 06

உதிர்வு
2005 - 10 - 17

## திதி நிர்ணய வெண்பா

தக்க பார்த்திப சார் புரட்டாதி திங்கள்
பூண்ண பூரணையே புகழ்க்குளிர் இலட்சுமியம்மா
கொற்கை நற் சிதம்பரநாதர் என்பார் குவலயம்
விட்டே ஈசனடி சேர்ந்தார் என்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்







யாழ்ப்பாணம் வடமராட்சி புலோலியூராம்
நாராயண உடையாரின்
வழித்தோன்றதிலான செல்லையா (செல்லப்பா)
பாக்கியவதி தம்பதியினரின் இரண்டாவது
மகளும் கார்த்திகேசு சோமநாதரின் அன்பு
மனைவியும், உயர்சைவ உயர் வேளாண்
குலத்திலகமும் தேவதானம் துன்னாலை வடக்கு
பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

# திருமதி

# சோமநாதர் இலக்குமிஅம்மா

(அழகக்கா)

அவர்களின் அமரத்துவம் குறித்த

# நினைவு மலர்

## 16.11.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்
பொறுமையின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
தனியாக நின்று எம்மையெல்லாம் தாங்கி
அன்புடனும் பண்புடனும் நல்வழிப்படுத்தி ஆளாக்கி
அறிவுடன் எம்மை சீரோடும் சிறப்போடும்
வாழவைத்து
இன்று சிவபதமடையும் எம் அன்புத் தெய்வத்திற்கு
இந்நினைவு பாமாலையினைக்
காணிக்கையாக சமர்ப்பணம் செய்கிறோம்.



கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பஞ்சபுராணம்

**திருச்சிற்றம்பலம்**

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேன்.

## தேவாரம்

வண்டார் குழ லரிவையொடு
பிரியா வகை பாகம்
கொண்டான் மிக வானான்பிறைச்
சென்னிப்பெரு மானூர்
தண்டா மரை மலராளுறை
தவள நெடு மாடம்
விண்டாங்குவ போலுமிகு
வேணுபுர மதுவே.

## திருவாசகம்

உடையாள் உன்தன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதனால் அடேயேன் - உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியு வண்ணம் முன்னின்றே.

---

அன்னைக்கு உதவாதவன் யாருக்கும் உதவாதவன்.



Digitized by Noolaham Foundation:
noolaham.org | aavanaham.org

### திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே.

### திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்ட ருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

### திருப்புராணம்

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியா ரெல்லாம்.

### திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

---

சிக்கனம் இல்லாவிட்டால் யாரும் செல்வராக முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.

**காலஞ்சென்ற திருமதி சோ. இலட்சுமிஅம்மா அவர்களுக்கு நற்கதி அருளுமாறு அன்னாரின் குடும்பத்தவர்கள் குலதெய்வத்தை வேண்டிப் பாடிப்பராவியவை.**

**துன்னாலை புளியங்காண் சிதம்பரத்து சிவவிநாயகரைப் பாடிப்பராவியது**

ஆலும் குளமும் அயலே வயல்களும் மாயடர்ந்து
ஞாலம் செழித்திச் சூழ்கொட்டச் சிதம்பரத்து விநாயகமாய்
கோலந் திகழ்வுற வீற்றிருந் தாண்டிடும் கொற்றவனே
சீலமார் எம்மன்னை முத்தியின் பம்பெறச் செய்தருளே.

**துன்னாலை வெல்லிக்கம் தோட்டப்பிள்ளையார், துன்னாலை வல்லியானந்தப் பிள்ளையாரை வேண்டிப் பாடிப்பராவியவை**

எல்லையில்லாப் பனைவளமும்
வயல் வளமும் சூழ்ந்திருக்க
துன்னையம் பதியமர்ந்த
வேதத்தின் மெய்ப்பொருளே
ஒல்லையிலே ஓடி வரும்
அடியவர்க்கு அருள்பவனே
தொல்லையாம் பாவமெலாம்
துடைத்தே அருள்வாயே.

---

சிரிப்பும், அழுகையும் வாழ்க்கையின் தோழர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் அடியவரின்
விக்கினங்கள் தீர்ப்பவனே
வேண்டிய வியாசனுக்காய்
கொம்பொடித்து நின்றாயே
பூண்டிடும் விடதங்கள்
பொட்புற அருள்பவனே
மீண்டும் வந்திட்டாள்
அழகக்காவுக்கு அருள்வாயே.

### துன்னாலை வீட்டம்மனை வேண்டிப் பாடிப்பராவியவை

வளந்திகழும் துன்னாலைப் பதியில் வாழும்
வண்டமிழ்தேர் மக்கள்பலர் வரங்கிடந்தே
உளம் பொருந்திச் சேவித்து உருகிப்பாடி
ஊழ்வினைகள் போக்கிடவே கோயில்கொண்ட
பழம்பொருளே வீட்டம்மா தாயே
பகலிரவுன் பொற்பாத சேவைக்காகக்
களங்கமின்றி பணிபுரிந்த எம்அன்னையை
கையணைத்து கயிலாயம் காட்டுவாயே.

### ஆழியவத்தை வைரவர், சோழியவத்தை வைரவர், வெள்ளித்தியான் வைரவர், புற்பத்தை வைரவரை வேண்டிப் பாடிப்பராவியவை

சூலத்தைக் கையிலேந்தி சுடர்மிகு ஒளிப்பிளம்பாய்
எம்குலம் காக்கும் துன்னாலை வாழும் வைரவரே
நாளும் உனை போற்றுகின்ற அழகக்கா உன்பாத நிழலதனில்
பேரின்ப பேறடைய அருள்வாயே.

### செல்வச்சந்நிதி முருகனை வேண்டிப் பாடிப்பராவியவை

தெங்கும் பனையும் திகழ்வயல் யாவும் திரண்டொருங்கே
தங்கும் இடமாம் தளியதில் மேவித் தனியமர்ந்து
எங்கும் அருளைப் புரிந்திதம் செய்யும் சந்நிதி முருகா
துங்க முறும்முத்தி எம்தாய்க் கீந்து துயர்களையே.

---

இனிய சொற்கள் வலிமை நெஞ்சை உருகவைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வல்லிபுர ஆழ்வாரை வேண்டிப் பாடிப்பராவியவை.

அஞ்சுதலை நாகமதில் ஆடும் திருமாலே
அஞ்சுதலை நீக்கி அருளாள்க - தஞ்சமென
நின்னடியைச் சேர்ந்த நிகரிலாத அன்னையை
பொன்னடியிற் சேர்ப்பாய் புகுந்து.

### பிரத்தி சங்கிலி காளிதேவியை வேண்டிப் பாடிப்பராவியவை

பொங்கிப் படையலிட்டு பூக்குவியல் பாதமிடை
அங்கமர்த்தி நாளும் அடிபணிய - பொங்குமருள்
தந்தவளே காளியம்மா தாழ்ந்து பணிகின்றேன்
எந்தனையு மாள்க இனி.

### உபயகதிர்காமக் கந்தனை வேண்டிப் பாடிப்பராவியவை

தான்தோன்றித் தெய்வமே தரமுறை மண்வளமே
மண்தோன்றாக் கல்தோன்றுங் காலமுதற் பொருளே
விண்போகா தெம்நோக்கு விரைந்து நீ காப்பாயே
கண்பரிய பேரொளியே கைதூக்கி விட்டிடப்பா.

### தில்லையம்பலப்பிள்ளையாரை வேண்டிப் பாடிப்பராவியவை

வயல் புலம் சூழ் வான்பயிர்கள்
வயல் செழிக்க நற்பசுக்கள் - வாழநல்
நிழல்தரு தில்லையம் பதியானே - உன்
சுழல்சேர அருள்தருவாய் சரணமையா.

---

மனம் பண்பட்டவர்களிற்கு எந்த வைத்தியர்களினதும் அறிவுரை தேவையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

யாழ்ப்பாணம், வடமராட்சியில் புலோலியூரின் நாராயண உடையார் பரம்பரையில் வழித்தோன்றலில் வந்த அமரர் செல்லையா பாக்கியவதி தம்பதியினர் இல்லற வாழ்வின் பயனாக மூன்று குழந்தைச்செல்வங்களைப் பெற்றனர். திருப்பதி, இலட்சுமிஅம்மா, வீரசுந்தரம் ஆவார்கள்.

இலட்சுமிஅம்மா சிறுவயதிலே ஆர்வமும், துடிப்பும் உள்ளவர். தனது கல்வியை யா/ துன்னாலை மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் கற்றார். அமரர் இலட்சுமிஅம்மா தகப்பனாருடன் வேளாண்மை செய்வதிலும், தகப்பனாருக்கு உதவியாகவும் இருந்தார். தம்பியார் வீரசுந்தரம் தாய் தந்தையருக்கும் சகோதரியருக்கும் செல்லப்பிள்ளையாக இருந்தார். இவர் 1960ம் ஆண்டு அகாலமரணமானார். அமரர் இலட்சுமிஅம்மா தனது கல்வியை இடைநிறுத்திவிட்டு வீட்டுப் பொறுப்புகளை கவனித்தார்.

அமரர் இலட்சுமிஅம்மா தனது மைத்துனனான கார்த்திகேசு சோமநாதரை பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்துகொண்டார். இல்லறவாழ்வின் பயனாக பதினைந்து பிள்ளைகளை பெற்றெடுத்தார். அமரர் இலட்சுமிஅம்மாவின் ஐந்து பிள்ளைகள் சிறுவயதினிலேயே இறந்துவிட்டார்கள். இந்த வேதனைகளைத் தாங்கிக்கொண்ட இலட்சுமிஅம்மா தனது ஏனைய பிள்ளைகளை நன்கு படிக்கவைத்தார். ஆண்பிள்ளைகள் ஆறுபேரையும் நல்லதொரு வேலையில் சேர்த்துவைத்து தனது விருப்பப்படி திருமணமும் செய்துவைத்தார். பெண்பிள்ளைகளை தமிழர் கலாசாரத்துக்கு ஏற்ப அறிவுக்குப் படிக்கவைத்து வேலைக்கு அனுப்பாது திருமணம் செய்துவைத்து தனக்கு அருகிலே இருத்தினார். அமரர் இலட்சுமிஅம்மா ரங்கநாதன் சிறிசேனா (மல்லி) என்ற ஓர் வளர்ப்பு மகனை வளர்த்து வந்தார். அவருக்கு திருமணம் செய்து வைத்தார். அவரது மனைவி இறந்துவிட அவரையும் அவரது பிள்ளைகளையும் அமரர் இலட்சுமிஅம்மாவே வளர்த்து திருமணமும் செய்துவைத்தார். அமரர் இலட்சுமிஅம்மா தனது பேரப்பிள்ளைகளுக்கும் திருமண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பாடுகளை முன்னின்று செய்துவைத்தார். அமரர் இலக்குமிஅம்மா கணவனது உழைப்பிலும் அவரது வேளாண்மை செய்து வரும் சம்பாத்தியத்திலும் சேர்த்த பணத்தை மீதப்படுத்தி தனது அயலில் உள்ள காணிகளை வாங்கினார். வாங்கி சேர்த்து வைத்திருந்த காணிகளை தனது ஆண், பெண் பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும், வளர்ப்புப்பிள்ளைகளுக்கும் பகிர்ந்தளித்தார். அமரர் ஒரு கொடைவள்ளல் திலகம். அயலவர்கள், உறவினர்கள் ஓர் உதவி கேட்டு வந்தால் இல்லையென்று சொல்லாது இருப்பதை கொடுத்து உதவிசெய்யும் மனப்பான்மை உள்ளவர். இவரது வாழ்க்கை காலத்தில் இவரது குடும்பத்தில், பிள்ளைகள் குடும்பத்தில், அயலவர் குடும்பத்தில் பிரச்சனைகள் ஏற்பட்டால் அதனை தான் விசாரணைசெய்து பிரச்சனையை தீர்த்துவைக்கும் மனோசுபாவம் கொண்டவர்.

இளையதம்பி சின்னம்மா (குஞ்சியாச்சி), வல்லிபுரம் மீனாட்சியம்மா ஆகியோர் இவரின் சிறியதாய் ஆவர்கள். நாராயணபிள்ளை, வல்லிபுரம் (சாத்திரியார்) இவரின் மாமனார் ஆவார்கள். இவ் மாமன்மாரின் ஆலோசனைகளை கேட்டு நடப்பது அமரர் இலட்சுமிஅம்மாவின் இயல்பு. சிதம்பரப்பிள்ளை, சூரியர் (கந்தப்பு), வள்ளிப்பிள்ளை, சின்னத்தங்கம், முத்துப்பிள்ளை ஆகியோர் இவரின் மாமிமார் ஆவார்கள். அன்னலிங்கம், பரமநிருபம், யோகேஸ்வரன், நாகரத்தினம், நாகேந்திரராசா, கந்தசாமி, நடராசா, இராசையா, சின்னத்துரை, பாக்கியம் ஆகியோர் இவரின் உடன்பிறவாத சகோதரர்கள் ஆவார்கள். திருநாவுக்கரசு, இலட்சுமி, வடிவேலு, கதிரவேற்பிள்ளை, சந்திரசேகரம், பாக்கியம், பகவதி, மனோன்மணி, சரஸ்வதி, சின்னத்துரை, நடராசா, இராசம்மா, செல்லாச்சி, நமசிவாயம், அரசி, சிவலிங்கம், அமிர்தாம்பிகை, சிவக்கொழுந்து ஆகியோர் இவரின் மைத்துனன், மைத்துனிமார் ஆவர்கள்.

இலட்சுமிஅம்மாவின் வாழ்க்கைக் காலத்தில் பதினைந்து பிள்ளைகள் பெற்ற காரணத்தால் உடல் பலவீனம் காரணமாக வாழ்க்கைக் காலத்தில் சிறுசிறு நோய்கள் ஏற்பட்டு குணமடைவது வழக்கமாக இருந்தது. ஆனால் 13.10.2004 இவர் கடுமையாக

---

ஒருவர் அறிவாளியாக இருந்தால் இருவர் இன்பமாக இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்வாய்ப்பட்டு படுக்கையானார். இதற்கு தாதியாக வேலைபுரியும் இவரது மகன் வேண்டிய சிகிச்சைகளை மேற்கொண்டார். சிகிச்சையின் பயனாக இலட்சுமிஅம்மா சில மாதங்கள் மட்டுமே உயிர்வாழ்ந்தார். 17.10.2005 வல்லிபுர ஆழ்வார் சமுத்திர தீர்த்தத்தன்று 10.45 மணியளவில் இவர் அனைவரது ஆசீர்வாதத்துடன் சிவபதமடைந்தார்.

## இரங்கற்பாக்கள்

### கணவன் கா. சோமநாதர் புலம்பல்

அழகிஉன் இன்னுயிர் ஆவி பிரிகையிலே
அன்பெல்லாம் சொல்ல எண்ணி இருந்தாயோ
உம் கனவை நனவாக்க உள்ளவரை நான் வாழ்வேன்
உம்பயணத்தை சொல்லவைக்கும் உலகமொன்றை நான் காண்கின்றேன்.

உம்மறைவைத் தாங்காமல் உள்ளம் நோகிறது
எண்ணும் போதெல்லாம் ஏக்கம் நிறைகிறது
அழகம் உன்னாத்மா அரனடியில் சாந்திபெற
எப்போதும் பிரார்த்திப்பேன் என்றுமே நான் மறவேன்.

களங்கமற்ற அன்பு செய்த கருணை அணங்கே
உன் காலடியில் இம்மலரைக் கரம்கூப்பி வைக்கிறேன்
அர்ப்பணிக்கும் இம்மலரை அழகம் நீ ஏற்று
உன்இறுதிப் பயணமுறை எனக்கும் வேண்டி நிற்கிறேன்.

### மகன், மகள் புலம்பல்

நினைத்திடவே நெஞ்சமெல்லாம் பதறுதம்மா, நின்வதனம்
நிழலாடி எம்மகத்தைப் பிளக்குதம்மா எமக்காக
நினைத்து நினைந்துருகிடுவாய் நின்கவலை நாமறிவோம்
நினதுமனம் கவலையுற ஒரு குறையும் இன்றியே

---

முதியவர் ஒருவருக்கு அளிக்கப்படும் மரியாதை கடவுளுக்கு செய்யப்படும் மரியாதையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைப்பாக உன்னை நாம் பார்த்தெடுத்தோம் முகம்சுழிக்க
முடியாத வகையினிலே முயன்று நாம் எல்லாஞ் செய்தோம்
வினைப்பயனோ எம்அம்மா உன்தலையில் கொள்ளிவைத்தோமே
வேதனையின் விளிம்பினிலே வெந்து வெந்து உருகுகின்றோம்.

நொந்துமனம் நோன்பிருந்து நுகர்தலங்கள் பலவியற்றி
நோய்நொடிகள் வராது காத்துஎமை வளர்த்தெடுத்து
சிந்தை நிறை பாசமதில் சீராக வாழ வழிவகுத்த
செம்மை நிறை எம்அம்மா சென்றுவிட்டாய் எமைவிட்டு
முந்தை வினைப் பயனிதுவோ முதிர்ந்தாலும் உன்கண்ணை
முகம்பார்க்க இருந்த அம்மா மூடிவிட்டாய் உன்கண்ணை
அந்தோ! எம் அம்மாவுன் அழகுமுகம் பழகுமொழி
அனைத்தையுமே எங்கே நாங்கள் காண்போமோ எங்கள் அம்மா!

## நெஞ்சம் பொறுக்குதில்லையே!!!

பண்பினில் இனியவளாய்!
பழக்கத்தில் எளியவளாய்!
பிறப்பினில் இளையவளாய்!
அறிவினில் கருதுத்துப் பேழையாய்!
செயற்றிறனில் வீராங்கனையாய்!
ஆ! வர்ணிக்க வார்த்தையில்லை
உன் முகம் கண்டதும் ஒரு கவியைக் கேட்பேன்
இனிய அந்த முகமெங்கே? கவிக்குயில் எங்கே?
தொடர்பாடலின் போது தத்துவங்கள் பகர்வீரே
அந்த வார்த்தையை இனி யார் சொல்வார்!
என்னே!! அணைந்தது என் அன்புத் தீபம்
அழகி எனும் உரிமைக் கோஷம்
துயரங்கள் சேரினும் தோற்றங்கள் மாறினும்
துன்னையம் பதியில் உன் பெயர் நிலைக்கும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*சகோதரி திருப்பதி*

---

கொடுக்கும்போது தயங்காதே, இழக்கும்போது வருந்தாதே,
சம்பாதிக்கும்போது பேராசைப்படாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறாமக்கள் புலம்பல்

பெற்றெடுக்கா விட்டாலும் தாயேபோல
பேணியெமை வளர்த்தீரே பெரிதும் நாமும்
உற்றதுயர் கொண்டிருக்க உழலுகின்றோம்
உமைக்காண இனியெமக்கு வழியோ இல்லை
நற்றாயே நாற்றவமே நாங்களிங்கு
நலிவதுதான் விதியோ சொல்லம்மா நீயும்
பற்றினை விட்டுடல் நீக்கிச் சென்றாயந்தோ
பாவிகள் நாம் பாரினிலே பதறினோமே.

## மருமகன்மார், மருமகள்மார் புலம்பல்

முத்தான மாமியென மகிழ்ந்திருந்து
முகமிழந்த உடலாகக் கருகினோமே
சொத்தான மாமியெனப் பெருமை கொண்டு
சோகமே உருவாகி வாடினோமே
சத்தியமே தவறாத தங்கள் தேகம்
சங்கமமோ தீயினிலே சகிக்கலாமோ
நித்தியமும் உம்நினைவால் வாடுகின்றோம்
நீதியென்ன உயிர்பறிக்கும் காலனுக்கே.

## மைத்துனர், மைத்துனிமார் புலம்பல்

பண்பாலும் அன்பாலும் எமைக்கவர்ந்த
பாங்கான மைத்துனியே பவளமேநீர்
உம்பால் நாம் வைத்திருந்த அன்பையெல்லாம்
உதறிநீர் தனிவழியே போனதேனோ
வன்பாலே உயிர்பறிக்கும் எமனுமுன்னை
வாய்கதறியழ வைத்துக் கொண்டானையோ
உன்பாதம் வணங்குகிறோம் நாங்களிங்கு
உலகத்தில் வேறென்னை நாம் செய்வோம்.

---

பேசிய பிறகு வருந்துவதைவிட பேசுவதற்கு முன்பே யோசனை செய்வது மிகவும் நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

கண்டுவிட்டால் முகமலர்ந்து காட்டிக் கையில்
காவியெம்மை விடுமுற்றும் சுற்றுவீர்
உண்டிருக்க இன்சுவைசேர் பண்டம் கோடி
உதவிடுவீர் வேண்டிய எடுத்து தந்து
கொண்டவரே கோபமுகம் கண்ட தில்லை
கூடிபுற வோரமுது தந்திடுவீர் தேம்புகின்றோம்
கொண்டு சென்று விடுவாம் பேரப்பிள்ளைகள் நாங்கள்
காண இனி முடியாதோ கலக்கந்தானோ.

அம்மம்மா வென்போம் ஓடிவலம் வருவோம்
அப்பம்மா வென்போம் ஆடியாய் களிப்போம்
எப்பவம்மா வருவீர்கள் எங்கள் நினை வில்லையோணை
இப்புவிக்கு அம்மாவே ஏக்கம் குடி கொண்டதெம்மை.

## பூட்டப்பிள்ளைகள் புலம்பல்

கற்பனையில் வாழ்ந்து வந்தோம்
கடுதியில் காண்போம் என
காலன் இட்ட கட்டளையை
கடுகாக்கி இருக்கலாமே
நாம் ஒருவருமே உங்களை காணாமல்
நாள் முழுதும் வாடி நின்றோம்
அன்புகாட்டி அரவணைக்க
ஆருமற்ற அனாதையாகி விட்டோம்.

## உற்றார், உறவினர், அயலவர் புலம்பல்

தஞ்சமெனக் கேட்டவர்க்கு தயங்காமல் உணவளித்து
உடன்பிறந் தார்போலவே உதவிநின்ற உன்பிரிவு
மடைதிறந்த வெள்ளம்போல் மனமுருக எம்சோகம்
சொல்லாலே சொல்லுதற்குச் சொல்லே இல்லையம்மா!

---

பெண்களுக்குரிய உண்மையான உயர்ந்த ஆபரணங்கள்
அவர்களுடைய நற்குணமும் தூய ஒழுக்கமுமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நால்வரைக் காண்பதுவோ அருமை இன்று
நல்லவளாய் வாழ்வதுவோ அருமையிங்கு
எல்லோரின் மனதினிலும் தீபமாகி
என்றுமே வாழ்ந்த நல்ல இதயராணி
சொல்லாமல் சென்றனையோ எம்மைவிட்டு
சோகமே வடிவானோம் சொல்லொணாத
அல்லலுற்ற அபலையென வாழ்வதுதான்
ஆண்டவனும் எழுதினனே எழுத்தாமோ.

## தேற்றம்

அலைகடல் சூழ் புவனமெலாம் போற்றும் காந்தி
அடிதழுவும் கஸ்தூரி அம்மை எங்கே
கலையமுதக் கடலுண்ட ஔவை எங்கே
கற்புடைய கண்ணகிப்பெண் கடவுளெங்கே
விலைமதியாப் பாரதத்தாய் ஈன்றெடுத்த
வீரமணித் தாய்மார்க ளெங்கே எங்கே
தலையன்பு இலட்சுமியம்மா செல்லத்
தயங்குவதேன் துயரமினித் தணிகுவீரே.

## மகன் சிவராசன்

எனது ஒவ்வொரு பிள்ளைகளைப் பற்றியும் நீங்கள் சொல்லும் வார்த்தைகள்; இவை வேறு யாரால் சொல்லமுடியும். மூத்தவன் றஞ்சன் பொறுமையின் சிகரம் என்றீர்கள். அடுத்தவன் சீலன் அம்மாவின் பிள்ளை. பிருந்தன் சட்டாம்பிள்ளை - நெறிதவறி நடக்கமாட்டான். எனது பூட்டன் தம்பப்பா. இவன் திட்ட அலுவலராவான். சிவாஸ்கரன், ரமணன் - உனது வீட்டுப்பிள்ளை, உரிய நேரத்தில் உரியதைச் செய்வான். இப்போ கொடு பின் தருவான். தர்சன் - உனது காலடியில் நிற்கும் பிள்ளை. கண்டபடி கதைக்கமாட்டான். மகள் சிவானி - எனது அம்மா பானுமதி கடைக்குட்டி துஷியந்தினி 7ஆம் கால் உனது அதிஸ்டப்பிள்ளை. பேர் புகழுடன் வாழ்வாள்.

---

அடக்கம் ஆயிரம் பொன் தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பிள்ளைகளை இன்னும் எத்தனையோ வர்ணனைகளுடன் வாழ்த்திய என் அருமைத்தாயே உங்கள் அன்புக்கு நாங்கள் அடி பணிகின்றோம்.

பெற்ற தெய்வமே; எனது துணைவியை மூத்த மருமகள் எனக்கு மகள்; எனது பிள்ளைகளுக்குத் தாய் என்றீர்கள். மனோ என்று எனது மனைவியை அழைக்கும் குரல் இப்போதும் ஒலிக்கிறது. தங்கமான உள்ளம் கொண்ட எங்கள் மாமியை இனி எப்போ காண்போம் என உங்கள் மருமகள் மனோ ஏங்கிக் கதறுகிறார் இங்கே.

தயவான தாயே; அன்பான அன்னையே; பெருமைமிகு பெற்றவளே; மாசற்ற மாதாவே. பிறப்பென்று ஒன்றிருந்தால் இறப்புண்டு என்பது எங்களுக்குத் தெரிந்தாலும் துவண்டு துடிக்கிறது எமது உள்ளங்கள். இனிய துணைவியாக அரிய அம்மாவாக வாழ்ந்த உங்களுக்கு ஆத்மசாந்தி கிடைக்க நாம் ஆண்டவனை இறைஞ்சி வேண்டுகின்றோம்.

## அம்மா!!!

அன்பிலே நிறைந்த நெஞ்சம்
இன்புறப் பணிகள் செய்து யார்க்கும்
இன்முகம் இனிய வார்த்தை கூறி
கண்ணென உறவுபேணி கனிவுற நெஞ்சத்தோடு
மண்ணதில் மாண்புபேணி மதிப்பொடு வாழ்ந்தீர்கள் அம்மா
விண்ணகம் தேவரோடு நற்பதம் பெற்றீர் தாயே
கண்ணகம் நீராறோட காண்பது எந்த நாளில்
குன்றிலே விளக்காய் வீசும் உங்கள் ஒளியிலே வாழ்வோம்.

---

வெற்றியைக் கண்டு ஆவேசம் கொள்ளுதல் ஆகாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா : நேரில் நின்று பேசிய தெய்வமே, உங்கள் வார்த்தைகள் ஒவ்வொன்றும் பொன் வார்த்தைகளாகும். உங்கள் கூற்றுக்கள் எங்களை மேலே மேலே ஏற்றிவைத்தன. உங்களுக்கு மூன்று வருடங்களாகப் பிள்ளைச் செல்வம் இல்லாதிருந்தபோது ஒரு சித்தர் வந்து சிவபெருமான் வருகிறார். திருநாவுக்கரசு என்று பெயர் வையுங்கள் என்று கூறிச் சென்றதையும், மூத்த மகனாகப் பிறந்த எனக்குச் சிவராசன் என்று பெயர் சூட்டியதையும் நீங்கள் மகிழ்ச்சியோடு கூறியதை என்னால் மறக்கமுடியாது அம்மா.

நோய்வாய்ப்பட்டுப் படுக்கையிலிருந்தபோதும் கூடப் பல அறிவுரைகள் கூறினீர்கள். அத்தனையும் மந்திர வார்த்தைகள். சகோதரங்களோடு ஒற்றுமையாய் இரு. அவர்கள் ஏது கதைத்தாலும் பொறுமையாய் இருந்து சகோதர ஒற்றுமையைப் பேணிப் பாதுகாத்துக் கொள் என்றீர்கள். அம்மா உங்கள் வார்த்தைகளை உயிர் உள்ளவரை பேணிக்காப்பேன். ஐயா எது பேசினாலும் வாய் திறவாதே. நீ உன் மனைவி பிள்ளைகளுடன் சகல செல்வங்களும் பெற்று வாழ்வாய். தாயே; உங்கள் வாழ்த்துகள் என் வாழ்க்கைப் பயணத்தின் நேரிய பாதையாகும். இது உண்மை.

எனது துணைவியின் பிரசவ காலத்தில் பேரப்பிள்ளைகளை நிரையில் இருத்தி உணவு கொடுத்து, பின் நல்ல கதைகள் கூறி நல்வழிப்படுத்தும் செயல்கள் என்மனதில் படம் பிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் எம்மால் இக்காட்சிகளை இனிமேல் நிஜத்தில் காணமுடியுமா?

## மகள் புவனேஸ்வரி

அம்மா!

மூத்தவளாய் பிறந்தேன், உன் அன்பான அரவணைப்பில் வளர்ந்தேன். ஒரு குடும்பத்தின் சுமைகளாய் பொறுப்பேற்று நடாத்தும் வல்லமையை எனக்கு அளித்தாய். எனக்கு திருமணம் செய்துவைத்து பேரப்பிள்ளைகளையும் அரவணைத்தாய். எனது கணவர் மறைந்து

நல்லோர் மனத்தை நடுங்கச் செய்யாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் நண்டும் குஞ்சுகளுமாக கதறி நின்றபோது "பாலன் பஞ்சம் பத்து வருடம்" மனம் தளராதே என்று ஆறுதல் தந்து எனது பிள்ளைகளையும் சீருடன் வளர்த்து அவர்களுக்கு நல்ல வாழ்க்கையும் அமைத்துக் கொடுத்தாய்.

"எனக்கொரு தாய் இருக்கின்றாள் என்றும் என்னைக் காக்கின்றாள் தாயில்லாமல் நானில்லை" என்ற பாடல் வரிகள் அம்மா உனக்கே பொருத்தம்.

நெஞ்சினிலே நினைவு முகம் அந்த நினைவினில் தெரிவது அழகுமுகம் உன் ஆசை முகம் அம்மா!!!

## மகன் குமரதாசன்

அம்மா!

தாயோடு அறுசுவைபோம் என்பார்கள். ஆனால் அத்தனையும் நீ போனபோது போய்விட்ட மாதிரி எனது உள்ளத்தில் தோன்றுதம்மா.

நல்ல ஒழுக்கமும் கல்வியுமே எதிர்காலத்தில் எம்மை நல்லவர்களாக சமுதாயம் கணிக்கக்கூடியவர்களாக உருவாக்கும் என்பதை உணர்ந்து எமது கல்வியில் நீங்கள் காட்டிய ஆர்வமும் அதற்காக உங்களை அர்ப்பணித்து எங்களுக்கு வழிகாட்டியதையும் மறக்கவில்லை. அதேநேரம் கலைமகள் வாசம் செய்தால் மட்டும் போதாது. திருமகளும் வாசம் செய்தால் தான் வீடு சிறக்கும் என்ற உண்மையறிந்து வேண்டிய நேரத்தில் வேண்டிய உதவிகளை செய்து தலைநிமிர்ந்து வாழவைத்தாய்.

"நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்
நினைவினால் உன்முகம் நிறைந்திருக்கும்".

---

நல்ல நண்பர்கள் இல்லாதவன் அதிஷ்டமில்லாதவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் கிருஸ்ணராசா

பெற்றெடுத்த பிள்ளை மீது பாசங்காட்டி பேரன்பு கொண்ட எங்கள் அம்மா! என்னைப் பார்த்து அன்புமொழி பேசிட ஓடோடி வந்திடுவாயே. சிந்தையில் உயர்ந்து விளங்கிய தயாளமுகம் இங்கே காணாது தவிக்கிறேன்.

என் மாமா இறந்து இரு திங்கள் ஆகவில்லை. அவரைப் பிரிந்து மனம் இன்னும் ஆறவில்லை. உங்களையும் காலனவன் இடைவழியில் பறித்தானோ ஐயையோ. கருகுதே இதயமுந்தன் பிரிவினை எண்ணியெண்ணி.

வல்லிபுரஆழ்வாரின் சமுத்திர தீர்த்தமன்று உங்கள் உயிர் பிரிந்ததுவோ. மறக்கமுடியவில்லை உங்கள் பிரிவினை எண்ணும் போது எங்களை விட்டுட்டு போக மனமின்றி படுத்திருந்தாய். எப்படி அம்மா ஒரு நொடியில் பறந்திட்டாய். விம்மி அழுதும் கவலை தீரவில்லை ஓடோடி வந்து ஒருமுறை பாராயோ.

## மகன் கணநாதன்

## *இதயக் கீறல்கள்.....*

உலகம் ஒரு நாடகமேடை. அதில் நீயோ பல வேடங்களில் - அன்புப் பிள்ளையாய், சகோதரியாய், நண்பியாய், மனைவியாய், மருமகளாய், மாமியாய், அம்மாவாய், பேர்த்தியாய், பூட்டியாய் ஆஹா! உன்னடி பங்குகள் எத்தனை! எத்தனை!!. அவை ஒவ்வொன்றிலும் ஓர் அழகைக் கண்டேன். நகையோடு நோக்கினேன் நான். பசையாக நீக்கமற எங்கும் நிறைந்திருந்தாய். கடமையுணர்வில் கண்ணியமானாய். செயற்றிறனில் செயம் கொண்டாய். ஆக்கத்தில் அருளுருவானாய். தேட்டத்தில் தெவிட்டாது தித்தித்தாய். பாசத்தைப் பரிவுடன் பொழிந்தாய். பொதுமைகளைப் பொறையுடன் நோக்கினாய். பாத்திரமறிந்து பழக்கமது

---

தீர்ப்பளிக்காதே நீயும் பாவி தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்கொண்டாய். பத்துப் பிள்ளைக்குத் தாயானாலும் - எம் வருத்தம் கண்டால் பசி நோக்காய் கண் துஞ்சாய். தனித்துவம் அறிந்து தடம் பதிப்பாய். உம் வாழ்க்கைப் பாதையில் எத்தனை புதுமைகள். அத்தனையும் வாழ்வின் அர்த்தங்கள் - ஐயகோ!!! எண்ண எண்ண இதயம் கனக்கிறது - அம்மா. கீறல்கள் சோககீதங்கள் இசைக்க உம் வழிகாட்டலில் எம் பதிவுகள் தொடரட்டும்.......

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மகன் பத்மநாதன்

## என் அம்மா

அம்மா, நீ சுமந்த பிள்ளை, சிறகொடிந்த கிள்ளை. என் நெஞ்சம் கொண்டாடும் தாயே, அன்னை ஓர் ஆலயம். ஆம் அந்த ஆலயத்தைப் பற்றிய சிறிய நினைவுக் குறிப்பு.

நான் என் நினைவு தெரிந்த நாளில் இருந்தே எதைச் சாப்பிட விரும்புகின்றேனோ அதை உடனே செய்துதருவா. சாப்பிடும்போது பார்த்துக் களிப்புறுவா. தரம் 1 படிக்கும்போது ஒருநாள் மழையில் நனைந்து வீடு திரும்பும்போது பாதிவழியில் வந்து என்னைத் தூக்கி வந்தமை இன்றும் என் நினைவில் உள்ளது. அது மட்டுமல்ல என்னை விட மூத்தவர்கள் என் பிழைகளுக்காக என்னைத் தண்டிக்கவிடமாட்டார். தானே பிழைகளைப் பொறுத்துக்கொள்வார். இப்பொழுதும் வயது 45 ஆகியும் நான் எதைச் சரியெனச் செய்கின்றேனோ அதற்கு என்னுடன் சேர்ந்து உரிய புத்திமதிகள் கூறுவார்.

என்னுடைய திருமண வாழ்வில் எவ்வளவோ பிரச்சனைகள் தலை தூக்கியபோது அதனைச் சுலபமாகத் தீர்த்த முறையை நினைக்கும்போது எமது குடும்பத்தில் இப்படி யாதும் இல்லை என்றே நினைக்கத் தோன்றுகிறது. எனக்கு என்ன பிரச்சனைகள் ஏற்பட்டாலும் அம்மாவுடன் கதைத்தால் பிரச்சனையை இனம்கண்டு அதற்குரிய தீர்வையும், என் மனதைத் தளரவிடாமல் புத்திமதிகளும் கூறுவார். இன்று அவரின் பிரிவு எனது மனதைப் பெரிதும் பாதித்துள்ளது.

---

அகந்தை அறிவைக் கெடுக்கும். புகழிலும் வேண்டும் அடக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயதில் இருந்தே ஏன் இப்பொழுதும் அம்மா கூறிய அறிவுரைகளும், கதைகளும் என்னை என்றும் நல்லவனாகவும், வல்லவனாகவும், பிறர் மதிக்க வாழும் நிலைக்கு உருவாக்கியுள்ளது என்றால் மிகையில்லை.

அவர் நோய்வாய்ப்படும்வரை ஓய்ந்திருந்ததை நான் கண்டதே இல்லை. பிள்ளைகளுக்கு, பேரக்குழந்தைகளுக்காக ஏதாவது செய்துகொண்டே இருப்பார். அவர் தனது சிக்கனத்தினாலும், கணவரின் நேர்மையான சம்பாத்தியத்தினாலும், அவர் வாழ்ந்த துணுக்காய் உயிலங்குளத்திலும், துன்னாலை வடக்கிலும் - காணிகள், வயல்கள், தோட்டங்கள் என தன் பிள்ளைகளுக்காக தேட்டங்கள் தேடித் தந்தார். இதனால் எமது பொழுதுபோக்கு தோட்டம், வயல் வேலைகள் என்றே செலவானதால் நானும் சகோதரர்களும் நல்லவர்களாக வாழ வழி செய்தார்.

தனது சொந்த வாழ்க்கை அனுபவத்தின் காரணமாக தனது அனைத்துப் பிள்ளைகளையும் ஊரிலே இருக்கக்கூடிய வழிகளை அமைத்த பெருமையும் அன்னையையே சேரும். எமது அன்னைக்கு ஒரே ஒரு மூத்த சகோதரி மட்டுமே. உடன் பிறந்த ஆண் சகோதரனும் சிறுவயதில் இறந்ததனால் தனது உடன் பிறவாத சகோதர சகோதரிகள்மேல் மிகுந்த அன்புடன் வாழ்ந்தார். அவர்களைப் பற்றி நாம் குறை கூறினாலும், அவற்றைச் சமாளித்து சிலநேரங்களில் எம்முடன் வாக்குவாதப்பட்டு எம்மை அவர்களுடன் ஒற்றுமையாக வாழச்செய்தார். இதேபோல் தனது கணவரின் உறவினருடனும் ஒற்றுமையாக வாழ்ந்தார்.

எமது தாயாரின் ஓய்வில்லாத முயற்சியினாலும், ஊக்கத்தினாலும் அவரின் பிள்ளைகளாகிய நாம் பத்துப்பேரும் பல்துறைகளிலும் திறமையுள்ளவர்களாக விளங்குகின்றோம். இத்திறமைகளுக்கு எமது தாயும் தந்தையுமே காரணமாகும்.

அன்னை கூறிய அரிச்சந்திரன் கதை, பாரதக்கதை இன்னும் பல கதைகளை சிறுவயதில் இருந்தே புகட்டியதனால் நாம் எதிலும் நேர்மையாகவும், இல்லற வாழ்வில் பிரிவில்லாமலும் வாழ வழிசமைத்தார்.

---

தவறு செய்வது இயல்பு. திருத்திக்கொள்வது உயர்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினத்தாருக்கு கூறியபோல "காதற்ற ஊசியும் வாராது உன் கடை வழிக்கே"

அவருடைய இறுதிக்காலத்தில் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு பன்னிரண்டு மாதங்கள் படுக்கையில் படுத்தார். அவருக்கு பரம்பரை வருத்தங்களாக நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்ற இருதய நோய்கள் இருக்கவில்லை. வயதின் முதிர்ச்சியினாலும், நரம்புத்தளர்ச்சி யினாலும் அவரின் உடல் பாதிப்புற்றது. படுக்கையில் இருந்த காலத்தில் என் விருப்பப்படியே வைத்தியர்களை அழைத்துவந்து காட்டும்போதும், வைத்தியம் செய்யும்போதும் சரியோ, பிழையோ எனது மருத்துவத்தில் மிகுந்த நம்பிக்கையும் திருப்தியும் அடைந்தார்.

இப்படியாக அவரின் ஒவ்வொரு செயல்களையும் பார்க்கும்போது இப்படியான மனிதப்பிறப்புகளை எம்மால் காண்பது மிகவும் அரிதாகும். சில பெரியோர்களை நாம் இழந்தால் ஈடுசெய்யமுடியாதது போல், எமது குடும்பத்திலும் அம்மாவின் பிரிவு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

கவிஞரின் கருத்துக்கமைய "போனால் போகட்டும் போடா, இந்த பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா? வந்தது தெரியும், போவது எங்கே? வாசல் நமக்கே தெரியாது? வந்தவர் எல்லாம் தங்கிவிட்டால் இந்த மண்ணில் நமக்கே இடமேது. கூட்டுக்குப் போனது திரும்பாது. கூக்குரலாலே கிடைக்காது?" என்று நினைத்து எனது மனதைத் தேற்றிக் கொள்கின்றேன். உன்னுடையது எதை நீ இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய், எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு என்ற கீதா உபதேசத்தை நினைக்கின்றேன். என்னைத் தேற்றுகின்றேன். எனது அம்மாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இத்துடன் எனது கருத்தை முடிக்கின்றேன்".

சாந்தி! சாந்தி! சாந்தி!

---

போட்டியிடுதல் பெருமை. பொறாமைப்படுதல் சிறுமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் தேவராணி

என்னைப் பெற்றெடுத்த என் உள்ளம் நிறைந்த என் அம்மாவே. என்னை வளர்த்து ஆளாக்க நீங்கள் பட்ட கஷ்டங்கள் எனக்கு நன்கு தெரியும். "நான் எதையும் செய்து முடிப்பேன்" என்ற தன் நம்பிக்கையுடன் எம்மை வளர்த்தீர்கள் அம்மா. எனது இளம்வயதில் நான் வாழ்வை வெறுக்கவேண்டிய கட்டம் ஏற்பட்டபோதும் கூட எனக்கு பல புத்திகள் கூறி பழைய கதைகள் பலவற்றை எனக்கு ஏற்ற மாதிரி மாற்றி அமைத்து எனது நிலைமைக்கு பொருந்தக்கூடியவகையில் கதைகள் கூறி என்னை ஆறுதல்படுத்துவீர்களே. இனி எனக்கு ஆறுதல் கூறுவது யார்? எங்கள் குடும்பத்தில் யாருக்கு கூடுதலான கவலையோ துன்பமோ உள்ள குடும்பத்துக்கு அடிக்கடி சென்று ஆறுதல் கூறுவீர்களே. இனியார் எமக்கு ஆறுதல் சொல்வது; எனக்கு திருமணம் செய்துவைத்து என்னை தனிமரமாக அல்லாது, கிளைத்த மரமாக்கிய என் அன்னையே எங்கே சென்றாய்.

எனக்கு மூத்தமகனாக ஜனன் உதித்தவுடன் அவவின் முகலட்சணத்தைப் பார்த்தேன். ஆனந்தத்துடன் தோன்றினார். அதன் பின்பு ஜமுனா, ஜெனிதா, ஜதுசனா என்னும் நான்கு தளிர்களைப் பெற்றெடுத்த உள்ளம் என் அம்மாவையே நினைத்தபடி குமுறுகின்றேன்.

எனது விதியை மதியால் வென்று என்னையும் ஒரு குடும்ப வாழ்வில் செழிக்கச்செய்து எனது இல்லமும் வெறிச்சோடாமல் மழலைச் செல்வங்களையும் அவர்களின் இனிய சொற்களையும் அவர்களின் நன்மை தீமைகளையும் பன்னிரண்டு வருடங்களாக எனது இல்லத்தின் பக்கத்தில்தான் அக்காவின் வீட்டில் தங்கியிருந்து கேட்டும் பார்த்தும் மகிழ்ந்தார். தன்னுடைய செயல்களால் தான் வெற்றி அடைந்துள்ளேன் எனக்கூறுவார்.

சுகயீனமுற்று இருக்கும்போது கூட பிள்ளைகளைக் கவனமாகப் பார் என்று புத்திமதிகள் கூறுவார். உண்மையிலேயே எனது அம்மாவால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் எனது குடும்பவிளக்கு ஒரு சுடர்விட்டு எரியும் விளக்காகவே ஆக்கிவிட்ட என் அம்மாவின் செயல்களை எப்போதுதான் மறப்பேன். எனது தாயார் உயிர் நீத்ததைத்தான் நான் முதல்முதல் கண்ணால் பார்த்தது. அவ் நிகழ்ச்சி எனக்கு ஒரு பேரிடியாக அமைந்தது.

பத்துப்பிள்ளைகளைப் பெற்றெடுத்த உள்ளம் பத்தினி என்பார்கள். உண்மையிலேயே அம்மா ஓர் பத்தினிதான். தனக்கு என்று வாழாது பிள்ளைகளுக்கெனவே வாழும் ஓர் உயிர் என்றால் எங்கள் அம்மாவையே சாரும். அவவின் விருப்பம் தனது பிள்ளைகள் எல்லாம் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று ஏதோ இயன்றவரை ஒற்றுமையாகத்தான் இருப்போம் என இறைவனை பிரார்த்தித்துக்கொண்டு எனது அம்மாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன். ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்பார்கள். ஆனால் எங்கள் அம்மா எத்தனையோ விடயங்களை அனுபவித்துத்தான் இறைவனடி எய்தினார். எவ்வளவுதான் அழுது புரண்டாலும் மாண்டவர் வருவாரோ இம் மானிலத்தில் வேண்டாம். நமக்கும் இக்கதியே தான் நிகழும் என எண்ணி எனது மனதை நிறைவு செய்தேன்.

எனது அம்மாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

## மகன் சரவணபவான்

நினைக்கவே கனக்கிறதே அம்மா - நெஞ்சம்
நான் செய்த நற்பயன் உங்கள் மகனானது.

உங்கள் நிழலில் வாழ்ந்திருந்தேன் - இனியெப்போ
உங்கள் இனிய முகம் பார்த்தழுவேன்
வாசலில் வந்தவுடன் வாவென்று எம்மையழைத்து
ஆசையாய் கைப்பற்றி அன்போடு
அன்றைய புதினங்கள் கேட்டறிந்து

---

அன்பும் ஆசையும் அளவாய் இருக்கவேண்டும். காலம் அறிந்து கடமை செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசி மகிழ்வீர்களே!
கடைக்குட்டி என்மீது பாசமழை கொட்டிய
அன்பு அம்மாவே எங்குபோனீர்கள்.

நல்லதுவோ தீயதுவோ எதுவென்றாலும்
நான் நடத்தும் காரியங்கள் யாவற்றிலும்
நீங்கள் இல்லாமல் நடந்ததில்லை - இதுவரைக்கும்
எல்லாமே முன்னின்று நடத்தி வைப்பீர்களே
வீற்றிருந்த நாற்காலி வெறுமனவே கிடக்குது அம்மா!

புத்திமதி பல சொல்லித் தந்தீர்கள் அம்மா - இன்று
உங்களுக்கு புத்திமதி பாடியழ வைத்தீர்களே
படத்தின் முன் இருத்தியெம்மை நாடாளும் ராஜா போல்
நம் குடும்பத்தினை ஆண்டது போதுமென்றெண்ணியோ
சென்றீர்கள் எம்மைவிட்டு ஆனாலும்
வீட்டம்மன் அடியினுக்கே சென்று
அமைதி யடைவீர்களென ஆறுதலடைகின்றேன்.

## மகள் யோகராணி

அம்மா உன் வீட்டை ஆலயமென சுற்றி வந்தேன்
சதா கடவுள் இல்லா ஆலயத்தை சுற்றுகிறேன்
அம்மா உன்னை காணாமல் அன்னத்தை தொட கை மறுக்கிறதே
அம்மா என் வேதனையை நீ அறியாயோ.

அம்மா எனக்கு ஆறுதல் சொல்லும் உன் சொற்கள்தான் எங்கே?
எனக்கு நீ அருகில் இருந்த சொல்லும் புத்திமதியை
இனி யார் எனக்கு இயம்புவது அம்மா.......
உன் அறிவுக் கோடுகள் சிந்தும் முகம் என் முன் நிழலாடுதே.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னிலோ வைரத்திலோ என் மனம் இலயித்ததில்லை
இன்பமோ துன்பமோ என்னை வென்றதில்லை
அம்மா உன் இடி செய்தியை என் காதுகள் கேட்க மறுக்கிறதே
அம்மா என்னை ஒவ்வொரு நொடியும் இழக்கின்றேன்.

அம்மா உன் ஒற்றைக் கண்ணில் நீர் வடிந்தால்
அம்மா பத்துக் கண்ணில் உதிரம் வடியுதே
அம்மா பள்ளிக்கூடம் தந்ததில்லை
நீ தந்த பாசத்தை அம்மா.....

அம்மா நீ ஊட்டிய பிடி சோற்றில்
ஆயுள் முழுக்க பசி மறந்தேன்
வேதங்கள் நான்கும் சொன்னதில்லை
உன் வரலாற்றுக் கதை யொன்றை.

உன் அளவுகடந்த பக்தியினால் அம்மா
நீ கடவுளையே ஜெயித்தாய் ஆனால்
யமனிடம் நீ தோற்றதன் காரணமேனோ
அம்மா அந்த கொடிய காலன் என்ன சொல்லி அழைத்தான்.

அம்மா நீ செய்த உதவிகளுக்கு
இந்த மண்ணுலகம் விண்ணுலகம் தந்தாலும் ஈடாகுமோ?
அம்மா உனக்கு இந்த உலகில்
வஞ்சகர்கள் இருக்கிறார்களா?

அம்மா உலகில் வஞ்சகர்கள் இல்லையென எண்ணி
எல்லோரையும் உடன் பிறந்த சகோதரர்கள் என
எண்ணி வாழ்ந்தாய் அம்மா அந்த யமனுடனும்
இந்த பாசத்தை வளர்த்தாயா அம்மா......

---

செய்யாத தொழிலைச் செய்தவனும் கெட்டழிவான்.
செய்த தொழிலை விட்டவனும் கெட்டழிவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த யமனோ இதுதான் தருணம் என்று
உன்னை கவர்ந்து சென்றான் அம்மா.....
உன்னைப் போன்று ஒரு ஜீவன்
விண்ணுலகத்திற்கு வேண்டுமென்று கொண்டுசென்றான் அம்மா......

அம்மா எனக்கு நல்லதொரு வாழ்க்கையை அமைத்தாய்
அமைத்தது மட்டுமன்றி ஒரு பொன்மொழி சொன்னாய்
எதிர்நீச்சல் இல்லாமல் அலைதாண்ட முடியாது
அலையோடு பயமென்றால் கரைசேர முடியாது.

அம்மா இந்த பொன்மொழி என் செவியிலே
அம்மா தினம் தினம் எதிரொலிக்கிறது
அம்மா உன்னைக் காணாமல்
இறைவனுடன் தினம் போராடுகிறேன் அம்மா.

மகள் அருள்ராணி

கடமை என்னும் பாதையில்
கலங்கரை விளக்கான
என் அன்புத் தெய்வத்தின்
கண்ணீர் சோகங்கள்

அருமையான ஆசை அம்மாவே
நேசமுடன் எமை அணைக்கும்
நிகரற்ற தன்மையையும்
சற்றே நினைத்த போது
விம்மி விம்மி விழுந்தழுகின்றேன்
தனித்திருந்து அழுகின்றேன் - உன்
கடைக்குட்டி குழந்தையான்.

---

அன்பு காட்டுங்கள்! அரவணையுங்கள்!! அனுதாபம் வேண்டாம்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான வார்த்தை பேசுவதும்
ஆதரவாக அணைப்பதுவும்
இயல்பான குணமாக கொண்ட
ஈகையாளி எங்கள் அம்மாவே
எளிமையான வாழ்க்கை வாழ்ந்துகாட்டிய அம்மாவே
ஏதும் எனக்கு துன்பம் நேர்ந்தால்
ஐயம் இன்றி உன் பேபி மருமகளிடம்
ஒன்றொன்றாய் உரைத்திடுவாய்
உனது சாதனையை நான் மறவேன்
யான் தரணியில் உள்ளவரை.

ஆசை அம்மா நீங்கள் என் கடவுள்
ஆசை அம்மா நீங்கள் என் மகாத்மா
உங்கள் சாதனையை, செயல்களை
என்றும் நான் மறவேன் அம்மா
இன்றும் என் வீட்டு வாசலில்
நின்று பார்க்கின்றேன் அம்மா
நீ வருவாய் என.

## *எம் அக்கா!!!*

இப்பூமிமேல் பிறந்தோர் யாவரும் இறப்பெய்துவது நியதி. இருந்தபோதிலும் இந்நியதிக்கு முகம்கொடுக்க மனிதனுக்கு இயல்பு இல்லை. இவ் யதார்த்த நிலையை உணருவது மிகவும் கடினம். இதற்கு யாம் விதிவிலக்கல்ல. எம் சகோதரி வாழ்ந்து இறுதிக் கட்டத்திற்கு வந்தாலும் அவவின் இழப்பு தாங்கமுடியாத ஒரு நிகழ்வு. அன்பு, பாசம், ஆதரவு யாவற்றையும் ஒருங்கே அனுபவித்த எமது உள்ளம் எம் சகோதரியின் இயற்கை நியதியை ஏற்க மறுக்கிறது. என்றும் மனந்திருந்தி கலங்கும் நிலைக்கு நாம் உள்ளோம்.

---

முன்னேற்றப் படிகளில் ஏறும்போது வழியில் சந்திப்பவர்களிடம் அன்பாய் இரு. ஏனெனில் இறக்கும்போது வழியில் அவர்களை சந்திக்க வேண்டியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் பிறந்த மாந்தர்கள் ஆற்றவேண்டிய எல்லா விடயங்களையும் மிகவும் சாதுரியமாக நிறைவேற்றிய எம் சகோதரியை நினைத்து பெருமையடைகின்றோம். கணவனுக்கு ஏற்ற பத்தினியாய் பிள்ளைகளுக்கு பிரியம் மிக்க தாயாக வழிகாட்டியாக உறவினருக்கு ஆதரவுடனான நண்பியாக உற்றார் ஊரவர்க்கு ஓர் ஆசானாக எமக்கு எம் பிரிய அக்காவாக ஏன் யாவருக்கும் ஒரு தலைவியாக வாழ்ந்துகாட்டியுள்ளார். அவவின் மறைவு ஈடுசெய்யமுடியாத இழப்பு. இருந்தபோதும் ஆண்டவன் பாதார விந்தங்களில் அவவை ஒப்படைத்து மனதைத் தேற்றுவோம்.

உடன்பிறவா சகோதரர்கள்
இ. அன்னலிங்கம், இ. யோகேஸ்வரன்,
இ. நாகேந்திரராஜா

## உடன் பிறவா சகோதரர்கள்

அழகி அக்கா அழகி அக்கா என்று நாம் அறியாப் பராயத்திலிருந்து அழைத்தோம் அக்கா. பெற்றதாயை ஆச்சி என்றும் என் தாயை அம்மா அம்மா என்றும் அல்லும் பகலும் அன்பாக அழைத்தாய் அக்கா. எங்களின் வாழ்விலும், தாழ்விலும் பங்காற்றி முதுமையின் கொடுமையால் ஈராறு திங்கள் படுக்கையில் படுத்துவிட்டு பூவுலகை இழந்தாய் அக்கா! இறைவனே யாம் எங்கு சென்று முறையிடுவோம். உன் சந்நிதியில் எம் அக்கா முகம் காட்டிட மாட்டாயோ!!!

கந்தசாமி, நடராசா

நம் வாழ்வில் கடைசித்தினம் இதுதான் என்ற உணர்ச்சியுடன் ஒவ்வொரு நாளையும் மிகவும் பயன் உள்ளதாகச் செலவு செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளர்ப்பு மகள் கமலாதேவி

அன்னைக்கு நிகர் வளர்ப்பு அன்னை. அப்படிப்பட்ட எனது அன்னை ஓர் தலவிருட்சம். ஆலமரத்தைப் போல் படர்ந்து நிரந்தர நிழலைத் தந்து அன்பிற்கும், பாசத்திற்கும் அடிமையாகி வாழ்ந்த தெய்வீகப் பிறவி.

"அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை
அவர் அடிதொழ மறப்பவர் மனிதரில்லை"

கருக்குடும்பம், கூட்டுக்குடும்பமாக விரிவடைந்த காலங்களில் அம்மாவின் அரவணைப்பின் வெளிப்பாடு சாலப்பெரிது. ஆம்! எனது உள்ளத்தில் வைத்துப் பூசிக்கப்படவேண்டிய அற்புதமான மானிடத் தோன்றல் அன்பு, பாசம், கடமை, பக்தி எல்லாம் நிறைந்து அவதாரம் இன்சொல்லின் இருப்பிடம்.

இத்தகைய அன்னை எம்மை மீளாத் துயரில் விட்டுச் சென்றாலும் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

## ரங்கநாதன் சிறிசேனா (மல்லி)

அம்மா!

இப்போது எங்கே இருக்கிறாய் அம்மா! என்னை நீ தத்தெடுக்கும் போது மூத்த தங்கச்சி பிறந்து இருந்தார். அதன் பின்னர் நீ ஒவ்வொரு பிள்ளையாக பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்குவதற்கு நீங்களும் யாவும் பட்ட கஷ்டம் நான் அறிவேன் அம்மா இவர்களின் படிப்புக்கு நீங்கள் எவ்வளவு கஸ்டப்பட்டீர்கள் அம்மா. ஐயா வன்னியில் உழைத்த சொத்தை பயன்படுத்தி வேண்டிய காணி பூமிகளையும், பொருட்களையும் வாங்கி உங்கள் பிள்ளைகளை சிறப்பாக வாழவைத்தியே அம்மா;

---

கடன் கொடுப்பதை விடத் தானம் கொடுப்பது மேல்.
இரண்டிலும் ஏற்படுவது ஒரே நஷ்டம்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு திருமணம் செய்துவைத்து பிள்ளைகள் பிறந்தபின் மனைவி இறக்க என்னையும் பிள்ளைகளையும் உன் பிள்ளைகளுடன் சேர்த்து வளர்த்தியே அம்மா; என் பிள்ளைகளுக்கும் சொத்து வாங்கி திருமணம் செய்து வைத்தியே அம்மா! என் வாழ்நாளில் உன்னைப்போல் ஓர் பெண்ணை கண்டதில்லை அம்மா. உன்னை இனியான் எப்போது காண்பது, உன்னை காணாது என் இதயம் வாடுகிறது.

---

அறிந்ததை அறிந்தோம் என்று அறிவதும் அறியாததை அறிந்திடலாம் என்று அறிவது அறிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
06.12.1926

மறைவு
17.10.2005

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவர் ஒன்றியத் தலைவர்

சி. சிவபாஸ்கரனின் அன்பு பேர்த்தியார்

## அமரர் திருமதி லக்ஷ்மியம்மா சோமநாதர்

அன்பின் உறைவிடமாய்
பண்பிற்கு இருப்பிடமாய்
பாசத்தின் மையமாய்
நட்புக்கு சிகரமாய்
கலங்கரை விளக்காய் மிளிர்ந்தீர்கள்
கலங்கினோம் செய்திகேட்டு
தலைவிதி இதுவோ என்று
பொல்லாத கூற்றுவன் சொல்லாமல்
பறித்தானோ அம்மா.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்திக்கும் பிரார்த்திக்கிறோம்.

பிரிவுத்துயரில் வருந்தும்
விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்

---

காகிதக் கப்பலில் பயணஞ் செய்பவன்தான் இந்த உலகத்தின் அமைப்பில் அதிக நம்பிக்கை வைத்திருப்பவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
06.12.1926

உதிர்வு
17.10.2005

அமரர்
## திருமதி லக்ஷிமியம்மா சோமநாதர்
(அழகக்கா)

பாசத்தின் திருவுருவே
நேசத்தின் ஒளிவிளக்கே
எம்மைவிட்டு பிரிந்து சென்றது ஏனோ?
உம் திருமுகத்தை எப்போது இனி நாம் காண்போம்
எத்தனை ஜென்மம் எடுத்தாலும் உம் நினைவு எம்மை
விட்டு அகலாதம்மா?

எம் சக தாதி உத்தியோகத்தரின் தாயாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட வைத்திய அதிகாரியும்,
தாதிய உத்தியோகத்தர்களும்,
சக ஊழியர்களும்
ஆதார வைத்தியசாலை,
பருத்தித்துறை.

---

குழந்தைக்கு இருக்கும் நம்பிக்கையும், குற்றமற்ற தன்மையும் இருந்தால் கடவுளை அடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
**06.12.1926**

மறைவு
**17.10.2005**

எமது சக உத்தியோகத்தர்களான சோமநாதர் சிவராசா -
நிர்வாக கிராம உத்தியோகத்தர் (கோப்பாய்), சோமநாதர் கணநாதன்
வீட்டமைப்பு உத்தியோகத்தர் (கோப்பாய்)
ஆகியோரின் அன்புத்தாயாரான

## திருமதி சோமநாதர் இலக்குமியம்மா

(அழகக்கா)

அன்னாரின் மறைவு குறித்து துயருற்றிருக்கும் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உம் பிரிவால் துயருறும்
கோப்பாய் பிரதேச செயலரும்,
செயலக ஊழியர்களும்,
சமுர்த்தி உத்தியோகத்தர்களும்,
கிராம அலுவலர்களும்

---

நல்ல நூல்கள் மூலம் மற்றவர்களை புரிந்துகொள்ள முடியும்.
அத்துடன் தன்னைத்தானேயும் புரிந்துகொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப் பூக்கள்



மலர்வு
06
12
1926

உதிர்வு
17
10
2005

அமரர்

## திருமதி சோமநாதர் இலட்சுமியம்மா
(அழகக்கா)

எமது பாடசாலை சக ஆசிரியர்
திரு சோ. குமாரதாசன் அவர்களின்
அன்புத் தாயார் இறைபதம் அடைந்துள்ளார்.
அன்னாரின் மரணத்தினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் நாமும்
துயருறுகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ வதிரி, திருஇருதயக் கல்லூரி
அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள்.

---

ஒரு மனிதனைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டுமானால் அவனை ஆட்சிப்பீடத்தில் அமர்த்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்களான திரு. சோமநாதர் சிவராசா

(நிர்வாக கிராம உத்தியோகத்தர்),

திரு. சோமநாதர் கனநாதன் (வீடமைப்பு உத்தியோகத்தர்)

ஆகியோரின் அன்புத் தாயாரான

## திருமதி சோமநாதர் இலக்குமியம்மா

(தேவதானம், துன்னாலை வடக்கு, கரவெட்டி)

அவர்களின் மறைவு குறித்து துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்,

பிரதேச செயலகம், அனைத்து அலுவலர்களும்,

வலி. கிழக்கு, கோப்பாய். நலன்புரிச் சங்கம்.

---

தாய்க்காக மனைவியை வெறுப்பவனும், மனைவிக்காகத் தாயை வெறுப்பவனும் மிருகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி சோமநாதர் இலட்சுமியம்மா

(துன்னாலை வடக்கு)

எமது பிரதேச செயலகத்தில்

துன்னாலை வடக்கு கிராம அலுவலராகக் கடமையாற்றும்

திரு. சோமநாதர் கிருஸ்ணராஜா அவர்களின் அன்புத் தாயார்

திருமதி சோமநாதர் லட்சுமியம்மா அவர்களின்

மரணச்செய்தி அறிந்து அதிர்ச்சியும், வேதனையும்

அடைகின்றோம். அவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது

குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்

தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய

இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
வடமராட்சி வடக்கு,
பருத்தித்துறை.

பிரதேச செயலரும்,
நலன்புரிச் சங்க உத்தியோகத்தர்களும்,
ஊழியர்களும்.

---

சிலரை பலநாள் ஏமாற்றலாம். பலரை சிலநாள் ஏமாற்றலாம்.
ஆனால் எல்லோரையும் எப்போதும் ஏமாற்றமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் வாழ்வில் மேம்பட

அன்பு நிறைந்த உறவுகளே மகிழ்ச்சியின் ஆணிவேர். நம் குடும்பத்தினருக்கும், நமக்குமான உறவுகளே நம் வாழ்வின் சந்தோசத்திற்கு ஆணிவேராகின்றன. என்னை நானே மதிக்கின்றேனா? என்னை எனக்கே பிடித்திருக்கின்றதா? எனக்கும் என் உறவுகளுக்குமிடையில் ஆழமான புரிந்துணர்வுகள் உண்டா? நான் மகிழ்வோடு இருக்கின்றேனா? இதை நாம் புரிந்து தெளிந்து வாழும்போது நம்மைவிட மகிழ்ச்சியாக வாழபவர் எவருமில்லை என்று நாம் கூறிப் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். உறவுகள் பல வகைப்படலாம். நாம் ஒரு குழந்தையாக, பெற்றோராக, ஆலோசகனாக, நண்பனாக, பரோபகாரியாக அன்பை வெளிப்படுத்துவதாக மட்டும் அமையவேண்டும். எம்மைச் சுற்றியுள்ளவர்களிடையே நாம் வைத்திருக்கும் உறவும் தொடர்புகொள்ளும் முறையும் எங்களதும் பிறரதும் உளநலத்தை தீர்மானிக்கிறது. மனிதத் தன்மையுடன் அமைதியாக சமநிலையுடன் உறவுகளைப் பேணலும் தொடர்புகொள்ளலும் முக்கிய வாழ்வில் ஓர் இலட்சியம், குறிக்கோள், அர்த்தம் இருப்பது நல்லது. இது சமயம் சார்ந்ததாகவோ அல்லது சமூகநலன் சார்ந்ததாகவோ இருக்கலாம். எங்கள் வாழ்வில் இப்படியான ஓர் அர்த்தம் இருப்பதால் தேவையற்ற விடயங்களில் மனது சென்று பிரச்சனைகளை உள்வாங்கி கொள்வதிலிருந்து தப்பலாம்.

எம் வாழ்வு மீதான நம்பிக்கையும் எம் இலட்சியம், குறிக்கோள் மீதான நம்பிக்கையும் எம்மை உளநலத்துடன் வைத்திருப்பதில் கணிசமான பங்கை வகிக்கின்றன. மனம் அமைதியடைய தியானஞ் செய்யுங்கள். பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுங்கள். தமது திறமைகள் மழுங்கடிக்கப்படும் போதே நமக்கும் கட்டுக்கடங்காத கோபமும், வேதனையும் ஏற்படும். திறமைகளை மதிக்கவும் விட்டுக்கொடுக்கவும் நாம் பழகிக்கொண்டால் நமது முன்னேற்றம் நமக்கு உயர்வு தரக்கூடியதாகத்தான் இருக்கும்.

---

எதையும் சாதிக்க விரும்பும் மனிதனுக்கு "நிதானம்"தான் அற்புதமான ஆயுதமே தவிர கோபம் அல்ல. கோபத்தில் உடனே நீ நடவடிக்கை எடுத்தால் நிலைமை பயங்கரமாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பாதிப்புகள் ஏற்படாது உள சுகத்துடன் வாழ விரும்புவோருக்கு நீங்கள் கூறும் ஆலோசனைகள் புன்னகையுடன் மனரீதியில் பிரச்சனைகள் வராமல் தடுப்பதற்கு எங்கள் வாழ்க்கையில் சில விடயங்களில் கவனம் செலுத்தவேண்டும்.

1. வாழ்க்கை முறைமை
2. உறவுகளிடையேயான ஆரோக்கியமான தொடர்புகள்
3. குறிக்கோள்
4. நம்பிக்கை
5. ஆதரவு

என்பன அவற்றில் முக்கியமானது. வாழ்க்கை முறைமை பற்றிப் பார்த்தால் ஓர் அமைதியான, ஆறுதலான, சமநிலை பற்றிப் பார்த்தால் ஓர் அமைதியான, ஆறுதலான சமநிலையான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்.

உணவை எடுத்துக்கொண்டால் அளவான சமநிலையான உணவில் கவனம் செலுத்துதல் அவசியம். ஓய்வு என்பது அவசியமானது. அத்துடன் நித்திரை முக்கியமானது. அமைதியான ஆழந்த உறக்கம் கிடைப்பதை நாம் எல்லோரும் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

எமது மனதுள் அடக்காது மற்றவரை நாடி அவர்களுடன் கதைத்து, அவர்களின் ஆதரவைப் பெறவேண்டும்.

தேவை இருக்கும் இடத்தில்தான் சேவையும் இருக்கவேண்டும். நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு நம் வினைதான் காரணமேயன்றி மற்றவர்கள் அல்லர்.

எந்தத் தொழிலைச் செய்தாலும் அதில் நாணயமும் நம்பிக்கையும் பிரதிபலிக்க வேண்டும். ஒழுக்கமும், நேர்மையும் இல்லாது செய்யப்படும் எந்தத் தொழிலிலும் மேம்பாடு அடையமுடியாது.

உறவினர்கள் இருப்பது வாழ்க்கைக்கு நல்லதுதான். ஆனால் சுயநலம் மிகுந்த உறவினர்களால் வாழ்க்கைக்கு நன்மையை விடத் தீமையே அதிகம் ஏற்படும்.

---

காரணமில்லாமல் வரும் துன்பங்களைக் கடவுள் பேரால்தான் சமாளிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் தெரிந்தோ தெரியாமலோ பிழை செய்ய நேரிடுகின்றது. அப்பொழுது நம் தவறுக்கு மன்னிப்புக் கேட்பதே நல்லது. அந்த நேரத்தில் மன்னிப்புக் கேட்பது எமக்கு அவமானமாக இருந்தாலும் நம்மை மற்றவர் மத்தியில் உயர்த்தும் ஒரு பண்பாகவே காணப்படும்.

தவறை மறுப்பவர் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கின்றனர். சூழ்நிலைகளைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் வாழ்கின்றனர்.

மனம் அமைதியடைய தியானம் செய்யுங்கள். பிரச்சனைகளுக்கு தீர்வு காணுங்கள். சிந்தித்து செயற்படவேண்டும்.

"பிறரின் கணக்குத் தப்பானாலும்
தாயின் கணக்குத் தப்பாது".

மகன்
சோ. குமரதாசன்

கவலை என்பது ஒரு வலை. தனக்குத்தானே அதை வீசிக்கொள்கிறவர்கள் உண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி என்றால் என்ன?

ஆரம்ப வயதுகளில் பிள்ளைகளிடம் ஏற்படும் இயல்பான ஆர்வம். உயர்வான நற்செயல்கள் ஆகியவற்றின் விருத்திக்கு உரியமுறையில் அளிக்கப்படும் பயிற்சியே கல்வி.

- பிளேட்டோ

தனியாள் நடத்தை விருத்தி பற்றியதுடன் மகிழ்ச்சிகரமான அதிஷ்டமுள்ள வாழ்க்கையை நடத்தும்பொருட்டு புத்தியை விருத்தி செய்வதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுமே கல்வி.

- பிரான்சிஸ் பேக்கர்

இயற்கைக்கு ஏற்ப விருத்தியடையும் செயற்பாடு கல்வி

- ரூசோ

ஒரு பரம்பரை அதன் இருப்பு (தொடர்ச்சி) மற்றும் முன்னேற்றம் என்பன கருதி அதனது இளைய பரம்பரையினருக்கு உரிய கலாசாரத்தைப் பரிமாற்றம் செய்வது கல்வி

- ஜோன் ஸ்ருவர்ட்மில்

தாம் வாழும் சமூகத்தில் தமக்குரிய இடத்தை மாணவர் பெற உதவும் அனுபவங்களை வழங்குவது கல்வி.

- ஏ. சி. மூலர்

பிள்ளை தனது சூழலில் வாழ அவசியமான அனுபவங்களை வழங்குவது கல்வி.

- யோன்டியுயி

யுத்தத்தின் போதும் சமாதானத்தின் போதும் தனிப்பட்ட விடயத்திலும் பொது விடயத்திலும் நீதியான முறையிலும், முன் மாதிரியாகவும் செயல்படும் மனிதனை உருவாக்குவது கல்வி.

- ஜோன் பில்டன்

ஆரோக்கியமான உடலின் ஆரோக்கியமான உள்ளத்தை உருவாக்குவது கல்வி.

- அரிஸ்ரோட்டில்

முழு மனிதனை உருவாக்குவது கல்வி

- கொமினியஸ்

பௌதிக சமூகச் சூழல்களுடன் தனிமனிதத் தன்மை பொருந்தி வாழச் செய்வது கல்வி

---

முடியாதவனை மன்னித்துவிடு, விரும்பாதவனைத் தண்டித்துவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனிடம் ஆழ்ந்து கிடக்கும் உடல் உள்ள ஆன்மா ஆகிய இயற்றைப்பெற்றிகளை மலரச் செய்வது கல்வி.

- காந்தியடிகள்.

மனிதனுள் புதைந்து கிடக்கும் பூரணத்துவத்தை வெளிப்படுத்துவது கல்வி

- சுவாமி விவேகானந்தர்.

மனிதனைச் சான்றோர் ஆக்குதல் கல்வி

- பழந்தமிழ் மரபு

கல்வி என்பது மனிதப்பண்பு விருத்தி

- சாயிபாபா

கல்வி என்பது அனுபவம்

- யோன்டியுயி

கல்வி நோக்கங்கள்

1. சமூகத்திறனை வளர்த்தல்
2. கால மாற்றத்துடன் கல்வி நோக்கங்களும் மாற்றம்பெறுதல்
3. சூழலுடன் பொருந்தி வாழச்செய்தல்.

---

இல்லாமை கொடுமையல்ல, இயலாமை குற்றமல்ல,
விரும்பாமையே பாபமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகள் மேம்பட

- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும், தேவையில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டேயிருப்பதை விடுங்கள்.
- எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசூக்காக கையாளுங்கள் [Diplomacy] விட்டுக்கொடுங்கள்.
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆகவேண்டும் என்று உணருங்கள்.
- நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று கடைசிவரை வாதாடாதீர்கள்.
- குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
- உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்.
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள்.
- அளவுக்கதிகமாய் தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.
- எல்லோரிடத்திலும் எல்லா விசயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- கேள்விப்படுகின்ற எல்லா விடயங்களையும் நம்பிவிடாதீர்கள், அற்பவிடயங்களை பெரிதுபடுத்தாதீர்கள்.
- உங்கள் கருத்துக்களை உடும்புப்பிடியாய் அல்லது கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.
- மற்றவர் கருத்துக்களை, செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள்.
- பேச்சிலும் நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதை தவிர்த்து அடக்கத்தையும், பண்பையும் காட்டுங்கள்.

---

மோதல்கள் இல்லை என்றால் உண்மை என்ற ஒன்று அறியப்படாமற் போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்துகொள்ளாதீர்கள்.
* மற்றவர்களுக்கு உரிய மரியாதையைக் காட்டவும், இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.
* அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.
* பிரச்சனைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன்வாருங்கள்.

---

**மாறுபாட்டு உணர்ச்சி இல்லை என்றால் மோதல்கள் இல்லாமற் போய்விடும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீள அகலம் அளவுகளின் பலா பலன்கள்

### அகலம் அல்லது நீளம் (மனையடி சாஸ்திரம்)

6 அடி : இறைவன் கிருபை உண்டாகி - மனைமாட்சி ஏற்படும். பொன்னும் பொருளும் யோகமும் கூடும்.

7 அடி : வறுமை வாட்டும், பற்றாக்குறை பற்றும், தரித்திரம் தாண்டவமாடும். பிறரிடம் கையேந்தி வாழும் பேதமை உண்டாகும்.

8 அடி : செல்வம் செழிக்கும், தெய்வ கடாட்சம் கிட்டும். படிப்படியாக வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும். அதிகார அந்தஸ்து அமையும்.

9 அடி : துன்பம், தோல்விகள் தொடரும், மனைவியோடு மனமாச்சரியம் ஏற்படும். தரித்திரம் பீடிக்கும்.

10 அடி : ஊண், உடை, செல்வம் பெருகும். எதிர்பாராத பொருள் வரவுண்டாகும். இல்லை என்ற நிலையின்றி இனிமை கூடும்.

11 அடி : பால் பாக்கியம் பெருகும். எதிலும் எங்கும் வெற்றி கிட்டும். செல்வச்செழிப்பு உண்டாகும்.

12 அடி : துர்மரணங்கள் சம்பவிக்கும். துன்பம் துயரம் மிகும். ஏழ்மை வளரும். வறுமை கூத்தாடும். புத்திரர்களால் இழப்பு ஏற்படும்.

13 அடி : தோல்வியும், துயரமும் மிகும். நோய் வாட்டும். வருவாயில் வீழ்ச்சியுண்டாகும்.

14 அடி : அன்னியரால் இன்னல் கூடும். ஆபத்தும் அவலமும் ஆர்ப்பரிக்கும். இடையறாக் கவலையால் ஏங்கநேரும்.

15 அடி : வறுமை வாட்டும். இல்லாமையும் எதிரிகளால் துன்பமும் உண்டாகும். மனக்கிலேசம் மிகும்.

16 அடி : பொருள் பெருகும், புகழ் மிகும், செல்வம் சேரும், சிறப்பு அதிகரிக்கும், மகிழ்ச்சி பொங்கும்.

---

நன்மை செய்தவனுக்கு நன்றி காட்டு, தீமை செய்தவனை மறந்துவிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17 அடி : வெற்றி உண்டாகும். எடுத்த செயல் ஈடேறும். தொழில் வருவாய் மிகும். எதிரிகள் வசப்படுவர்.

18 அடி : பொன் பொருள் அழியும், திருடர் பயம் மிகும், வீடு இடியும், வேதனை பெருகும்.

19 அடி : இல்லாமையில் தொல்லையுண்டாகும். புத்திரரால் புன்மை ஏற்படும். கவலையும் சோகமும் குடிகொள்ளும்.

20 அடி : சொகுசான வாழ்வுண்டாகும், பண்ணைத்தொழில் பலிதமாகும். வருமானம் விருத்தி அடையும்.

21 அடி : எதிலும் எங்கும் வெற்றி கிடைக்கும், தொட்டதெல்லாம் பொன்னாகும், மகிழ்ச்சி உண்டாகும்.

22 அடி : வீண்பழி அகலும். எதிரிகள் இழிவடைவர். நாமார்க்கும் குடியல்லோம் என்ற சுய உணர்வு பெருகும்.

23 அடி : உயர்வு தடைப்படும். உற்றார் பகை மிகும். துன்பமும், துயரமும் பெருகும். நிம்மதி அழியும்.

24 அடி : கையிருப்பு கரையும், கவலை மிகும் நோய் நொடியால் இயலாமை தோன்றும், உழைப்பிற்கேற்ற லாபம் கிடைக்காது, எதிலும் இழுபறி நிலையே இருந்துவரும்.

25 அடி : இவ்வாழ்க்கையில் இடர்பாடு உண்டாகும். மனைவி வழியில் துன்பம் தோன்றும். மனைவியாலும் துன்பம் தோன்றும்.

26 அடி : பொன், பொருள் செழிக்கும், போக வாழ்வு மிகும், என்னாளும் இன்பமே.

27 அடி : உயர் பதவி கிடைக்கும், நல்லோர் உதவி கிட்டும், பாமரர் பாராட்டுவர், பெயரும் புகழும் கிட்டும்.

28 அடி : வெற்றி கிட்டும், வேதனை மறையும், துன்பம் நீங்கி இன்பம் பெருகும், அனைவரும் வசியமாவர், தெய்வ அருள் கிட்டும்.

---

மனநிலையில் தெளிவுள்ளவர்கள் தலைவர்களாகலாம்.
உடல்நிலையில் வலுவுள்ளவர்கள் தொண்டர்களாகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29 அடி : உயர்வான வாழ்வு அமையும். பால் பாக்கியமும் பண்ணைத் தொழிலும் சிறக்கும்.

30 அடி : லெட்சுமி கடாட்சம் கிட்டும். சந்தான பாக்கியத்திற்கும் குறைவிருக்காது. மூதாதையர் சொத்துக்கு அதிபராகலாம். யோகங்களுக்கும் குறைவிருக்காது.

31 அடி : யோக சித்தி கிட்டும். நல்லோர் சகவாசம் ஏற்படும். உயர்வும், புகழும் உண்டாகும்.

32 அடி : அனைவரையும் வசப்படுத்தும் ஆற்றல் உண்டாகும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பொதுநோக்கு வளரும். இழந்தவைகளை மீட்டுக்கொள்ளமுடியும்.

33 அடி : எல்லோரும் நல்லவரே என்ற எண்ணந்தோன்றும். வருவாயும் வாய்ப்புகளும் அதிகரிக்கும். செல்வம் செல்வாக்கு மிகும்.

34 அடி : தீமைகள் கூடும். தகாத காரியங்களைச் செய்துவிட்டு ஊரைவிட்டு, நாட்டைவிட்டே ஓடவேண்டி வரும், முன்னோர் பெயரும் புகழும் அழியும்.

35 அடி : செல்வச் செழிப்புண்டாகும். செய்தொழில் வருவாய் மிகும். பாராட்டுக்கிட்டும்.

36 அடி : உயர் பதவி கிட்டும். உலகம் பாராட்டும் வீர தீரச் செயல்கள் மிகும்.

37 அடி : எடுத்த செயல் ஈடேறும். பால் பாக்கியமும் பண்ணைத் தொழிலும் விருத்தி அடையும்.

38 அடி : ஏழ்மையும் இன்னலும் ஏற்படும். இயலாமை வருத்தும். எதிலும் இழுபறி நிலையே காணப்படும்.

39 அடி : அந்தஸ்து அதிகரிக்கும். அமைதியான குடும்ப வாழ்வு அமையும். பொன் பொருள் சேரும். மக்களால் மதிப்பு உயரும்.

---

வாழ்வதற்காகவே உணவருந்து, உண்பதற்காகவே வாழாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40 அடி : எதிர்ப்பும், இடர்பாடும் மிகும். எடுத்த செயல் தடைப்படும். எல்லாம் அரைகுறையாகவே முடியும்.

41 அடி : செல்வமும் புகழும் சேரும். தொழிலால் வருவாய் மிகும். வட்டி வணிகம் விருத்தியடையும்.

42 அடி : இல்லை எனும் சொல்லே இல்லை எனலாம். வாழ்வில் சகல போகமும் கிட்டும். அன்பும் இன்பமும் கூத்தாடும். எதற்குமே பஞ்சமில்லை எனலாம்.

43 அடி : எதிலும் ஏமாற்றம், எங்கும் தடை என்ற நிலையே இருந்து வரும். எடுக்கும் ஒவ்வொரு அடியும் சறுக்கும்.

44 அடி : நோய்கள் தொந்தரவு செய்யும். கண்பார்வை மங்கும். கண்களையும் இழக்க நேரும். துயரமும், துன்பமும் வாட்டும். ஏக்கம் அதிகரிக்கும்.

45 அடி : பொருள் மிகும். புகழ் விரிவடையும். நன்மை தோற்றும்.

46 அடி : வறுமை வாட்டும். கிட்டவரும் வாய்ப்புகள் கூட.

47 அடி : சேமிப்புகள் சிதறிப்போகும். கடனும் கவலையும் மிகும்.

48 அடி : தீயாலும், தீயோராலும் தீங்குண்டாகும். வறுமையும் விபத்தும் வாட்டும்.

49 அடி : திருடர் பயம் உண்டாகும். அரசாங்க தண்டனையும் சமுதாயத்தில் மானக்கேடும் விளையும்.

50 அடி : தோல்வியும், பிறர் தொந்தரவும் அதிகரிக்கும். காரியத்தடை ஏற்படும்.

51 அடி : நீதிமன்றம் ஏறும்நிலை உண்டாகும். பிறரால் துன்பமும் தொல்லையும் சூழும்.

---

நீ அறிந்துகொண்ட நன்மைகளைச் செயலாற்ற முயற்சிசெய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52 அடி : பொருள் மிகும். விவசாயம் விருத்தியடையும். எடுத்த காரியங்கள் ஈடேறும்.

53 அடி : வேசியர் உறவு வேதனை தரும். சில பெண்களால் அவமானம் அடையநேரும்.

54 அடி : காவல்துறையால் தொல்லை நேரும். அரச தண்டனையையும் அபராதங்களையும் ஏற்கவேண்டி வரும்.

55 அடி : குற்றம் பார்த்து சுற்றத்தைப் பகைக்க நேரும். கொடுமைகள் குவியும்.

56 அடி : வம்சம் செழிக்கும். பெருமையும் புகழும் கூடும். நன்மை ஓங்கும்.

57 அடி : குடும்பத்தில் வெறுப்பும், வேதனையும் மிகும். வம்ச விருத்தி தடைப்படும்.

58 அடி : துயரமும் துன்பமும் கூடும். எதிர்பாராத இழப்பு ஏற்படும்.

59 அடி : தேடிய பொருள் தீதுவழி விரயமாகும். வாட்டமும் ஏக்கமும் மிகும்.

60 அடி : தொழில் மேன்மையும், திரவிய விருத்தியும் ஏற்படும். தொட்டதெல்லாம் துலங்கும்.

61 அடி : பிறர் தலையீடு ஏற்படும். கலவரமும் கலக்கமும் மிகும். மன அமைதி குன்றும்.

62 அடி : வறுமையால் வாட்டமும் வருத்தமும் நேரும்.

63 அடி : பொன் பொருள் சேரும். புகழ் கூடும். அருளாளர் ஆதரவு மிகும். ஆனந்த வாழ்வு கிடைக்கும்.

64 அடி : அரசாங்க ஆதரவு மிகும். பரிசும் பட்டயமும் கிட்டும். பொன் பொருள் புகழ் கிடைக்கும், பூரண மகிழ்ச்சி உண்டாகும்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65 அடி : இல்வாழ்வில் இன்னல் சூழும். கொண்டவள் குதர்க்கம் பேசுவாள். கொடுமைக்கு ஆளாக்கி பிரிந்தும் போவாள்.

66 அடி : பொன், புகழ், நன்மக்கட்பேறு அனைத்தும் ஒருங்கே வந்து சேரும். மகிழ்ச்சியான சூழ்நிலை மனத்திற்கு அமைதியைத் தரும்.

67 அடி : திருடர் பயம் தோன்றும். தீய உத்திகள் ஆட்கொள்ளும். பேய்பிசாசு பயமுறுத்தும். வஞ்சகரால் சஞ்சலம் உண்டாகும்.

68 அடி : நினைத்த காரியம் நிறைவேறும். எதிர்பாராத பொருள் வரவுண்டாகும். அருளாளர் தொடர்பும் ஆன்மிகவாதிகள் ஆதரவும் ஏற்படும்.

69 அடி : பொருள் நாசமடையும். புகழ் வீழ்ச்சியுறும். தீயிலும், தீயோராலும் தீங்குண்டாகும்.

70 அடி : சென்ற இடமெல்லாம் சிறப்புண்டாகும். செல்வநிலை உயரும். செய்யும் தொண்டுக்கு புகழ் வந்து சேரும்.

71 அடி : செல்வம் சேரும். செழிப்பு கூடும். நல்லவர் உதவுவர். வல்லவர் பாராட்டுவர்.

72 அடி : உணவு, உடை, இல்லம், கல்வி, வருவாய் போன்ற அனைத்தும் அளவின்றிக்கிட்டும். ஆடம்பர வாழ்வு அமையும்.

73 அடி : வம்சவிருத்தி தடைப்படும். சுற்றத்தார் தேவைக்குச் செலவிட நேரும். பொருளும் புகழும் விரயமாகும்.

74 அடி : பரிசு, பட்டயம், பதவி தேடி வரும். பலரும் பாராட்டும் பாக்கியம் உண்டாகும். பொன் பொருள் சேரும்.

75 அடி : பொருள் பாழாகும். புகழ் வீழ்ச்சியுறும். அருளும் அன்பும் வற்றும். அல்லல் மேலோங்கும்.

76 அடி : பிறரால் கேடுகள் விளையும். உதவிகள் தடைப்படும். கொடியவர் பயமுறுத்தலுக்கு ஆளாகநேரிடும்.

---

ஆடம்பரம் அற்றிருப்பதே மானிடனுக்கு நற்குணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77 அடி : எதையும் சமாளிக்கும் ஆற்றல் உண்டாகும். அத்தியாவசியத் தேவைகள் அனைத்தும் கிடைக்கும். செல்வமும் செழிப்பும் உண்டாகும்.

78 அடி : வம்ச விருத்திக்குத் தீங்குண்டாகும். வளமான எதிர்காலம் கண்ணுக்குத் தெரியாது. இழிவும் இன்னலுமே எதிர்கொண்டழைக்கும்.

79 அடி : பால் பாக்கியமும், பண்ணைத் தொழிலும் வளர்ச்சி அடையும், பலராலும் பாராட்டப்படுவர்.

80 அடி : பொன், பொருள், போகமும், புகழ் விருத்தியும் ஏற்படும். சுகபோக வாழ்வு சித்திக்கும். சொகுசு மங்கையர் உறவு கிட்டும்.

81 அடி : தீயோரால் ஆபத்து, தீயால் விபத்தும் உண்டாகும். திரவிய நஷ்டம் ஏற்படும்.

82 அடி : இயற்கையால் இன்னல் உண்டாகும்.

83 அடி : சுகம் கெடும். தூய்மை குறையும். ஏழ்மையும், இன்னலும் சூழும்.

84 அடி : எதிர்பாராத உதவிகளால் ஏற்றம் உண்டாகும். வருவாய் வளர்ச்சியும், பதவி உயர்வும் கிட்டும்.

85 அடி : அரசு பதிவியும், ஆளுங்கட்சி உறவும் உண்டாகும். சொந்தத் தொழிலால் சோபிதம் ஏற்படும்.

86 அடி : ஆபத்தும் அல்லலும் மிகும். எதிர்ப்பும், இகழ்ச்சியும் அதிகரிக்கும். தொல்லை துயரங்கள் அல்லலைக் கூட்டும்.

87 அடி : பிரயாணங்களால் புகழ் கூடும். எதிர்பாராத உயர்வுகள் ஏற்றத்தைத் தரும். விலங்குகளால் நலன்கள் மிகும்.

88 அடி : எதிர்பாராத பிரயாணங்கள் ஏற்படும். இறை அருள் கிட்டும். மன அமைதியும் மகிழ்ச்சியும் உண்டாகும்.

---

உன்னை நீ காப்பாற்றிக் கொண்டு பிறரைக் காப்பாற்ற முயற்சிசெய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

89 அடி : செல்விருந்து ஓம்பி வருவிருந்து காத்திருக்கும் வளம் உண்டாகும். முன்னேற்றத்திற்கான நல்ல வாய்ப்பும் கிட்டும்.

90 அடி : செல்வம் செழிக்கும், சிறப்பு மிகும், அன்பும் ஆதரவும் வளரும்.

91 அடி : கல்வி மேம்பாடும் நல்லவர் நேசமும் கிட்டும். இறை அருளால் ஆதரவு பெருகும்.

92 அடி : அறக்கட்டளை நிறுவனங்களின் ஆதரவு பரிசும் பட்டயமும் கிடைக்கும். அரசாலும் ஆளுங்கட்சியாலும் நன்மை உண்டாகும்.

93 அடி : பொலிஸார் தொந்தரவுகளுக்கு ஆளாகவேண்டிவரும். அரசாங்க நிர்ப்பந்தங்களுக்கும் அடிபணிய வேண்டிவரும்.

94 அடி : வறுமை வாட்டும். வளங்கள் சுருங்கும். அமைதி குலையும்.

95 அடி : பொருளும், புகழும் விருத்தியடையும். செல்வந்தர் தொடர்பு உண்டாகும்.

96 அடி : சேமிப்பு வீணாகும். பொன்னாபரணங்கள் சேதமாகும். திருடர் பயம் மிகும்.

97 அடி : நீர்வழி நன்மை உண்டாகும். வணிகத்தால் பொருள் விருத்தி அடையும்.

98 அடி : சென்ற இடமெல்லாம் சிறப்புண்டாகும். கற்றோரும், கல்லாதோரும் நற்றுணையாவர். நன்மை புரிவர்.

99 அடி : கற்றோரும், செல்வந்தரும் ஆதரிப்பர். அரசாலும், ஆளுங் கட்சியாலும் நன்மை உண்டாகும்.

100 அடி : இறைவன் திருவருள் கிடைக்கும். பொன், பொருள், போகம் உண்டாகும். சகல சௌபாக்கியங்களும் கிட்டும்.

---

**ஆண்டவன் தந்த கொடைகளைச் சுயநலத்துக்குப் பயன்படுத்தாமல் பிறர் நலத்துக்காகவும் பயன்படுத்துங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101 அடி : வரவு மிகும். சேமிப்பு வளரும். புகழும் பூரிப்பும் ஓங்கும். மகிழ்ச்சி நிலவும்.

102 அடி : "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் பரந்த நோக்கு பரிணமிக்கும். நன்மைகள் நாடி வரும். வசீகர சக்தி வளரும்.

103 அடி : கள்வர் பயமும் கயவர் உறவும் அல்லலைத் தரும். ஏமாற்றமும் இழிவும் ஏற்படும். நம்பிக்கை நாணயம் குறையும்.

104 அடி : வரவு மிகும். வல்லவர் துணை லாபத்தைத் தரும். உறவினரால் செலவுகள் கூடும். மன அமைதி குன்றும்.

105 அடி : குடும்ப வாழ்வில் குறைபாடு தோன்றும். மனைவியால் மகிழ்ச்சி குலையும். குடும்பத்தில் சண்டையும், சச்சரவுமாகக் காலம் கழியும்.

106 அடி : பொருள் வரவும், பூஷ்ண சேர்க்கையும் உண்டாகும். அறிவும், ஆற்றலும் பெருகும். அருளாளர் நட்பு மிகும்.

107 அடி : ஈட்டிய பொருளை இழக்கநேரும், ஈனர் தொடர்பும் வறுமையும் தலைதூக்கும்.

108 அடி : மன அமைதி கிட்டும். ஆஸ்தீகவாதிகளின் அன்பும், ஆதரவும் பெருகும். எதிர்பாராத நன்மைகள் வந்தடையும்.

109 அடி : தொட்டதெல்லாம் பொன்னாகும். எண்ணித்துணியும் இயல்பு மேலோங்கும். மகிழ்ச்சியும், அமைதியும் நிலவும்.

110 அடி : பொன், பொருள், பூஷணம் சேரும். வரவு மிகும். வங்கியில் சேமிப்பு வளரும். உடல் நலம் நன்கு அமையும்.

111 அடி : காரியங்கள் சித்தியாகும். சுபிட்சம் நிலவும். சுப நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறும்.

112 அடி : எண்ணியவை ஈடேறும். இன்னலும் இழிவும் அகலும். பொன்னும் பொருளும் கிட்டும்.

---

**வாழ்க்கை என்பது சந்திரன் போன்றது. சிலவேளை இருட்டாகவும் சிலவேளை வெளிச்சமாகவும் இருக்கும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

113 அடி : எதையும் எடுத்து தொடுத்து முடிக்கலாம். எதிர்பார்த்த வரவுகள் வந்துகொண்டே இருக்கும். சுகபோகம் சுடர்விடும்.

114 அடி : தொடர்ந்து பயணங்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். தொழில் வழியில் பல நகரங்களில் வாழும் நிர்ப்பந்தம் உண்டாகும். மொத்தத்தில் தேச சஞ்சாரியாகத் திகழ்வர்.

115 அடி : பணம் சேரும். பாக்கியம் மிகும். மகிழ்ச்சி தாண்டவமாடும். மனஅமைதி உண்டாகும்.

116 அடி : வற்றாத செல்வமும், புகழும் வந்துசேரும். வாழ்வெல்லாம் சுகபோகத்தை துய்க்கும் வாய்ப்புண்டாகும்.

117 அடி : ஊர் சுற்றும் வணிகத்தால் லாபம் கிட்டும். பண்ணைத்தொழில் பலன்தரும். பால் பாக்கியம் உண்டாகும்.

118 அடி : சொத்து அழியும். சுகம் கெடும். புத்தி தடுமாற்றம் உண்டாகும். ஏழ்மை குடிகொள்ளும்.

119 அடி : என்னேற்றான் கொல் இவன் தந்தை எனப்பலரும் பாராட்டும் பாக்கியம் கிட்டும். சுகபோகங்கள் மிகும்.

120 அடி : தீய சக்திகளால் திரவியம் பாழாகும். அன்னிய தேசத்தவரால் ஆபத்துண்டாகும்.

மேற் குறிப்பிட்ட நன்மை தீமைகளை அறிந்து நாம் முன்னரே குறிப்பிட்ட அளவுகளிலேயே வீடு கட்டவேண்டும். இவற்றில் அகலமோ அல்லது நீளமோ தோஷமற்ற அளவுள்ளதாக அமைந்தாலும் சிறப்பே.

**மனச்சாட்சி என்ற கூட்டில்தான் ஒவ்வொரு நற்காரியமும் பிறக்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அக்கினி மூலையில் - சமையல் அறையும்
2. தெற்கில் - படுக்கை அறையும்
3. கிழக்கில் - குளியல் அறையும்
4. தென்மேற்கில் - புத்தக அறையும்
5. மேற்கில் - உணவு அருந்தும் அறையும்
6. வடக்கில் - தானிய சேமிப்பறையும்
7. ஈசான்ய திக்கில் - பூஜை அறையும்

அமைய வீடு கட்டவேண்டும் என்பது விதி.

**கீழே உள்ள படம் எது எது எங்கே அமையவேண்டும் எனக் காட்டுகிறது.**




**ஊர் அறிய விழுந்தவன் மட்டும் நகைக்கப்படுகிறான். மற்றவன் தப்பித்துக் கொள்கிறான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் தேசிய அந்தஸ்து

இவைகளுக்கே........

தேசிய மரம் - நாகமரம்
தேசிய மலர் - நீலோற்பலம்
தேசிய மிருகம் - யானை
தேசிய பறவை - காட்டுக்கோழி
தேசிய விளையாட்டு - கரப்பந்தாட்டம், எல்லே

## இலங்கையின் முதலிடங்கள்

முதல் பிரதமர் டி. எஸ். சேனநாயக்க
முதலாவது ஆளுனர் பிரெட்றிக் நோத் (1798 - 1805)
முதல் ஜனாதிபதி வில்லியம் கோபல்லாவ
முதல் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி J. R. ஜெயவர்த்தனா
தேசாதிபதியாக கடமைபுரிந்த முதல் இலங்கையர் சேர் ஒலிவர் குணதிலக
முதல் செய்தித்தாள் கொழும்பு ஜேணல்
முதல் தமிழ் செய்தித்தாள் உதயதாரகை (1841இல்)
முதல் பெண்கள் பாடசாலை உடுவில் மகளிர் கல்லூரி (1824)
முதல் அரசியல்கட்சி இலங்கை தேசிய காங்கிரஸ், இதன் முதல் தலைவர் சேர் பொன்னம்பலம் அருணாசலம் ஆவார்.
முதல் தபால் முத்திரை 1857ல் வெளியிடப்பட்டது. இதில் விக்ரோரியா மகாராணியின் படம் பொறிக்கப்பட்டு இருந்தது.

## இலங்கைக் கல்வி சம்பந்தமான சில குறிப்புகள்

இலங்கைப் பல்கலைக்கழகம் ஆரம்பம் - 1942 (கொழும்பு)
இலவசக்கல்வி ஆரம்பம் - 1945 இதனை அறிமுகம் செய்வதர் C.W.W. கன்னங்கரா
பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டமை - 1960
இலவச பாடநூல் விநியோகம் - 1980
தேசிய கல்வி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது - 1985

---

**பொய்மையின் அடிப்படையில் உருவான உறவுகள் சேற்றில் இடப்பட்ட அத்திவாரத்திற்கு ஒப்பாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவச மதிய உணவு விநியோகம் - 1989 - 1996 வரை
தேசிய கல்வி ஆணைக்குழு அமைக்கப்பட்டது - 1990
கட்டாயக் கல்விக்கான வயதெல்லை - 5 - 14 வயது
பாடசாலைகளின் எண்ணிக்கை - 10780 (1994 கணக்கெடுப்பின்படி)
உலக ஆசிரியர் தினம் Oct - 6 இல் கொண்டாடப்படுகிறது. இதற்கான பிரேரணையை உலக ஆசிரியர் சங்கத்தின் மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியான M. B. மெண்டிஸ் என்பவர் பிரேரித்தார்.
பல்கலைக்கழக மாணவர்களுக்கான மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் 1981 இல் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தை லலித் அத்துலக்முதலி அறிமுகம் செய்தார்.

கோள்களிலே.......

விட்டத்தில் பெரியது பாரமானது - வியாழன்
விட்டத்தில் மிகவும் சிறியது - புளூட்டோ
மிகவும் குளிரானது - புளூட்டோ
மிக வேகமானது - புதன்
பாரம் மிகவும் குறைந்தது - புதன்
சூரியனுக்கு மிகவும் அண்மையிலுள்ளது - புதன்
பூமிக்கு மிகவும் அண்மையில் உள்ளது - வெள்ளி
சூரியனுக்கு மிகத் தொலைவிலுள்ளது - புளூட்டோ
பிரகாசமானது - வெள்ளி
மிகவும் சூடானது - வெள்ளி
அதிகளவு துணைக்கோள்களைக் கொண்டது - சனி
இரண்டாவது மிகப்பெரிய கோள் - சனி
சுற்றிவர பல வர்ண தூசு வளையங்களைக் கொண்டிருப்பது - சனி
துணைக்கோள்கள் அற்றவை - புதன், வெள்ளி
சிவப்பு நிறமுள்ளது - செவ்வாய்

---

**கேட்பதையெல்லாம் நம்பாதீர்கள். தெரிந்ததையெல்லாம் சொல்லாதீர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகதேகி ஒருவனின் சாதாரண நிலையின் போது.

சுவாச வீதம் : 12 - 14 தடவைகள்/ நிமிடம்

இதயத்துடிப்பு வீதம் : 72 துடிப்புகள்/ நிமிடம்

குருதியமுக்கம் : 120/80 mm Hg

குருதியின் அளவு : 5 - 6 லீற்றர் (உடல் நிறையின் 8%)

குருதியிலுள்ள யூரியாவின் அளவு - 30 mg / 100 ml

குருதியிலுள்ள குளுக்கோசின் அளவு : 60 - 100 mg / 100 ml

(இது 180 mg/ 100 ml இலும் அதிகமாகும் போது வெல்ல நீரிழிவு ஏற்படுகின்றது)

நாளொன்றிற்கு வெளியேறும் சிறுநீரின் அளவு : 1.5 லீற்றர்

(இதில் 30 g யூரியா காணப்படும்)

உடல் வெப்பநிலை : 98.4°F (36.9°C)

ஒரு பொய்யை வாழ வைப்பதற்கு மேலும் ஒன்பது பொய்கள் சொல்லவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்ப்பாசம்



தாய்ப்பாசம் மனிதர்களுக்கு மட்டுமன்றி எல்லா உயிர்களுக்கும் பொதுவானதுதான்.

கங்காருவை எதிரிகள் துரத்தும்போது வேகமாக ஓடித்தப்பிவிடும். சிலவேளைகளில் தப்பி ஓடும்போது தம்மால் தப்பமுடியாது என்று தெரிந்தால் தமது வயிற்றுப் பையில் (Pouch) இருக்கும் குட்டிகளை எடுத்து அடர்ந்த புதர் செடிக்குள் வீசிவிட்டு ஓடும்.

தான் எதிரிகளிடம் அகப்பட்டு உயிரை விட்டாலும் தன் குட்டியாவது பிழைத்துக் கொள்ளட்டுமே என்று தாய்ப்பாசத்தில் தான் அவை இப்படிச் செய்கின்றன.

"நோயொன்று வந்து பாயொன்றில் வீழ்கையில்
தாயொன்று மனம் அடங்கொண்டு அழும்"

நல்ல செயல்களுக்கு கிடைக்கும் பயன்கள் காலம் கடந்துதான் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவழி

செல்லையா + பாக்கியவதி
(செல்லப்பா) (பார்வதி)

திருப்பதி அம்மா

இலக்குமியம்மா

வீரசுந்தரம்
(அமரர்)

ருஷ்ணராசா
+
ஜயக்குமாரி
↓
நிஷாந்தினி
கிருஷாந்தி
மகராஜ்

கணநாதன்
+
சகுந்தலாதேவி
↓
கபிலன்
ராஜீவன்
சிந்துஜன்

பத்துமநாதன்
+
சாந்தினி
↓
அபிராம்

சந்திரநாதன்
(அமரர்)

பாக்கியநாதன்
(அமரர்)

செல்வராணி
(அமரர்)

தேவராணி
+
சௌந்தரராசன்
↓
ஜனன்
ஜமுனா
ஜெனிதா
ஜதுசனா

சரவணபவன்
+
கமலகுமாரி
↓
கஜந்தன்
கவிதா

யோகராணி
+
வேலுப்பிள்ளை
↓
நிரோஜா
நிரஞ்சினி
கஜேந்திரன்

அருள்ராணி
+
சிவராசா
↓
சர்மிளா
கீர்த்தனா

மகன்

ன் சிறிசேனா
+
யம்மா

கமலாவதி
+
ஆனந்தசோதி
↓
சாந்தன், உசாந்தினி, வினோதன்

கலைச்செல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

என்நன்றி கொன்றவர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொண்ட மகற்கு.

எமது அன்புத் தெய்வம், இல்லத்தரசியாகிய அமரர் சோமநாதர் இலச்சுமி அம்மா (அழகக்கா) அவர்களின் 17.10.2005 சிவபதம் அடைந்த செய்தி கேட்டு.

ஓடோடி வந்து துயரத்தில் பங்கு கொண்டு பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும், நோய்வாய்ப்பட்டிருந்த போது வந்து பார்த்து வைத்திய உதவி செய்த வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும், தந்தி மூலமும் தொலைபேசி மூலமும் நேரிலும் அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு வெளிநாட்டு உறவினர்களுக்கும் அன்பர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியோர்களுக்கும், இறுதிச் சடங்கில் பங்கு பங்கு கொண்டு பலவழிகளிலும் உதவியவர்களுக்கும், எட்டாம் நாள் நிகழ்வுகளிற்கும் சமூகமளித்தோருக்கும் உதவியவர்களுக்கும், அந்தியேட்டியிலும் வீட்டுக்கிருத்திய வைபவத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மாசாந்திக்காகப் பிரார்த்தித்தோர்க்கும்.

தேவதானம்,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.



குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழ்ப்பூங்கா பதிப்பகம் - நெல்லியடி, கரவெட்டி. 021-2264014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org